
# MIN ALAI
# மின் அலை
....மின் புத்தக வடிவில்

May 2020 | Volume : 8 | Issue 05 | Price Rs. 16.75/- | Ann. Sub. Rs. 200/-


# Power sector "(Acu)puncture"




## மின்சார சட்ட திருத்த மசோதா – 2020




**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**
பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
|---|---|---|
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.G.கார்த்திகேயன் |

Press Release No.325 Date: 09.05.2020



**Text of the D.O. letter dated 9.5.2020 of Thiru. Edappadi K. Palaniswami, Hon'ble Chief Minister of Tamil Nadu, addressed to Shri. Narendra Modi, Hon'ble Prime Minister of India.**

"I would like to bring to your kind notice that the proposed amendments to Electricity Act, for which the Ministry of Power has invited the comments of the State Governments, require detailed consultations with the State Governments and other stakeholders. I wish to raise a few matters of utmost concern to the Government of Tamil Nadu which have a direct bearing on the independent functioning of the power sector in the State.

In my letter dated 12.11.2018, it was highlighted that the proposed Electricity Amendment Bill takes away certain powers of the State Government and at the same time seeks to bring significant changes in the existing Electricity Act, such as separating carriage and content in the distribution sector, which would make the power utilities in the public sector totally unviable. The proposed new draft bill seeks to privatise not just the supply of power to the end consumer through franchisees but to also privatise the entire distribution network, which would be highly detrimental to the state utilities and against public interest.

Further, despite our strong reservations, the new draft Bill continues to have provisions for the Direct Benefit Transfer (DBT) of subsidy provided to consumers, particularly in the agricultural and domestic sector. It has been already pointed out by me in my letter dated 12.11.2018, that there would be serious difficulties in implementing Direct Benefit Transfer in the Electricity sector and this would work against the interest of our farmers and domestic consumers. **It has been the consistent policy of my Government that our farmers should receive free power and it should be left with the State Government to decide the mode of payment of such subsidy.**

I have also pointed out earlier that the proposed amendment bill seeks to take away the power of the State Government in deciding the constitution of the State Electricity Regulatory Commission, which is against the federal principles of the Constitution. In the draft Bill it has been noticed that not just the same provisions are being retained, but it is also proposed to set up a parallel authority, namely Electricity Contract Enforcement Authority at the Central level to handle all contractual issues, which was hitherto dealt with by the Central and State Electricity Regulatory Commissions. This would unnecessarily dilute the authority of the Electricity Regulatory Commissions and needs to be deleted.

You are aware that all states are currently pre-occupied with fighting the Corona virus pandemic and will, therefore, require some time to give their detailed response to the proposed amendments. At the same time any hasty amendments to the Electricity Act may create hardship to the State power utilities, which are going through a severe financial crisis because of the present pandemic. As some of the provisions of the draft amendment bill are also likely to put the general public to hardship, particularly during this crisis period, I am of the view that this may not be an appropriate time to bring in such sweeping amendments to the Electricity Act.

In the circumstances, I urge you to prevail upon the Ministry of Power to put the proposed amendments to the Electricity Act in abeyance till these are thoroughly discussed with the state governments after the pandemic subsides."

ஆசிரியர்
பொர். N.R.செந்தில்
9499014992

## ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.G.கார்த்திகேயன்
பொர்.R.K.நரசிம்மன்
பொர்.R.சந்தோஷ்குமார்
பொர்.S.பாலாஜி


| Page | Contents |
|---|---|
| 02 | தமிழக முதல்வரின் 9.5.20 கடிதம் |
| 08 | தமிழக முதல்வரின் 18.5.20 கடிதம் |
| 10 | கேரள முதல்வரின் 18.5.20 கடிதம் |
| 14 | வாரிய ஆணைகள் |
| 18 | மின்சார சட்டத்திருத்தம் |
| 25 | AIFOPDE 21.4.20 கடிதம் |
| 28 | ஆளுமைத்திறன் வளர்ப்போம்...தொடர் |
| 31 | ஆத்திச்சூடி தொடர்..... |


**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9841150516**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 08 மே 2020 இதழ் 05

## வெட்டி அடிக்குது மின்னல்..... கொட்டி இடிக்குது மேகம்

இந்தியா சுதந்திரம் அடைந்ததற்கு பின்னர், நாட்டின் தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, அனைத்து மக்களுக்கும் மின்சாரம், தொலை துாரத்து கிராமங்களுக்கும் மின்சாரம் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதுதான் மின்சார விநியோக சட்டம் 1948.

அக்காலத்திலிருந்த தனியார் மின் நிறுவனங்கள் மின் சேவையை வசதி படைத்தோருக்கு மட்டுமே அளித்து வந்தது. அதனால் அந்நிறுவனங்கள் நாட்டுடமையாக்கப்பட்டன.

70 ஆண்டுகளில் மின்துறை மிகவும் வளர்ச்சி பெற்று இந்தியா ஒரு தற்சார்பு பொருளாதார வல்லரசாக மாறுவதற்கு வழிகோலியது.

நம் இந்திய குடிமக்களின் பணத்திலும் தொழிலாளர்களின் உழைப்பிலும் இன்று மின்துறை பரந்து விரிந்து இந்தியாவில் உள்ள குக்கிராமங்கள் வரை தனது செயல்பாட்டினை கொண்டு சென்றுள்ளது.

இம் மின்சாரத்தின் நுகர்வு இந்தியாவில் அதிகமாகி உள்ளது. உலக பெருமுதலாளிகளின் கழுகுப் பார்வையில் தற்போது இந்திய மின் சந்தை உள்ளது. இதை பயன்படுத்தி மக்களை சுரண்டி லாபமீட்டுவதே அவர்களின் நோக்கம். இதற்காகத்தான், 2003ல் மின்சட்டம் திருத்தப்பட்டு அமலாக்கப்பட்டது. தனியார் முதலாளிகள் இந்திய மின்துறையில் கடைவிரிக்கத் தொடங்கினர். இதனால் மின் வாரியங்களின் நஷ்டம் பெருமடங்கு பெருகியது தான் மிச்சம். இருந்தும் இப்பெருமுதலாளிகளின் பசியடங்கவில்லை. மீண்டும் 2014 மற்றும் 2018 –லும் இம்முயற்சிகள் தொடர்ந்தன. தொழிற்சங்கங்களின் எதிர்ப்பாலும் பல மாநில அரசுகளின் எதிர்ப்பாலும் இம்முயற்சி கைவிட வைக்கப்பட்டது. இந்திய மின்

சந்தையை மொத்தமாக ஆதிக்கம் செய்ய முனைகின்றன. இதன் விளைவாகவே இன்றைய மின்சார சட்டத்திருத்த மசோதா 2020.

தனியார் முதலீடுகளுக்கு லாபம் அளிப்பது, தனியாரின் கொள்ளை லாபத்திற்கான பணத்தை விரைந்து பெற்று தருவதற்கான அதிகாரம் இவை மட்டுமே இச்சட்டத்திருத்தத்தின் நோக்கம்.

ஊரடங்கு தொடர்ந்து அமலில் உள்ளபோது, மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து தவிக்கும் இத்தருணத்தில், பெரும்பாலான மாநில அரசுகள் இதனை எதிர்த்து வந்த போதும், தனியார் நலனுக்கான இம்மசோதாவை நிறைவேற்றுவதில் முனைப்பு காட்டுகிறது மத்திய அரசு.

மாநில அரசுகள் கோரும் கடன் வழங்கிட நிபந்தனையாக மானியத்தினை ஒழித்திட வேண்டும் என்றும் தெரிவிக்கின்றது, யூனியன் பிரதேசங்களில் மின் விநியோகத்தை தனியாரிடம் அளிக்கும் முடிவினை அவசர அவசரமாக எடுக்கிறது, மத்திய அரசு.

மகாராஷ்டிரத்தில் என்ரான், ஒடிசாவில் AES, தமிழகத்தில் GMR, PPN, தற்பொழுது பல மாநிலங்களில் மின் விநியோக Franchise தோல்வி ஆகியவற்றை கண்கூடாக பார்த்தபின்பும், தனியார் மயமும், உலகமயமாக்கலும் துவங்கிய மேற்கத்திய நாடுகள் அதன் மோசமான தாக்கத்தினை பார்த்துவரும் இத்தருணத்தில் இந்தியாவில் மட்டும் தனியாரை வரவேற்கும் நிலை ஏன்.....?

144 தடை உத்திரவு அமலில் உள்ளபோது இதை எளிதாக அமல்படுத்தி விடலாம் என்று கனவு காண்கிறது மத்திய அரசு.

உத்திரபிரதேச அரசின் தொழிலாளர் சட்ட திருத்தம் தொழிலாளர் அமைப்புகளின் எதிர்ப்பால் கைவிடப்பட்டதை கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.


நீறுபூத்த நெருப்பாக மின்துறை தொழிலாளர்களின் இதயத்தில் உள்ள போராட்ட கனலினை ஊதிப்பார்க்கிறது அரசாங்கம். 18.05.2020 தமிழ்நாடு மின்சார வாரிய அனைத்து பணியாளர்களின் ஒலி முழக்க போராட்டம், ஒரு சிறிய தொடக்க விளைவே...

இறுதி விளைவு?
புரிந்து கொள்ளுமா அரசாங்கம்?

"அக்கினி குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்..."

**நீ கடலில் கலந்திருக்கும் ஒரு துளி அல்ல;**
**ஒரு துளிக்குள் மறைந்திருக்கும் பெருங்கடல் நீ!**

**– ரூமி**



## பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே,

வணக்கம்.

தேசம் முழுவதும் 4வது கட்ட ஊரடங்கு அமல் படுத்தப்பட்டிருக்கும் இக்கட்டான இவ்வேளையில் எவ்வித பொதுப் போக்குவரத்து வசதியின்றியும், தொடர்ந்து இரவு பகல் பாராது பொதுமக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கிட அயராது பாடுபட்டுவரும் அனைத்து பணியாளர்களுக்கும், பொறியாளர்களுக்கும் மனம் திறந்த பாராட்டுக்களையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசின் சட்டத்திருத்த மசோதா 2020ன் மீது கருத்துரு கேட்ட தேதியிலிருந்து NCCOEEE கூட்டங்களை நடத்தி, கருத்துரு வழங்குவதற்கான காலக்கெடுவை நீட்டிக்க கோரியது. பின்னர் மத்திய அரசு பல்வேறு நெருக்குதலுக்கு பிறகு காலக்கெடுவை ஜுன் –5 வரை நீடித்தது.

மூன்றாம் கட்ட ஊரடங்கின் இறுதியில், ஊரடங்கால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்காக வெளியிடப்படும் அறிவிப்புகள் வரிசையில், சுயசார்பு சீர்திருத்தங்கள் என்ற போர்வையில் மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களால் யூனியன் பிரதேசங்களில் மின் விநியோகம் தனியார் மயமாக்கப்படும் என்று வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு மின்துறையில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு மின்வாரிய அனைத்து தொழிற்சங்க கூட்டுக்குழு உடனடியாக கூடி அடுத்த பணிநாளிலேயே 18.05.2020 அன்று ஒலிமுழக்கப் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

பொதுத்துறையின் சேவையை ஒட்டுமொத்தமாக பாதிக்கும், மின்துறையில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும், பொதுமக்கள் நலனில் மோசமான பொருளாதார சுமைகளை ஏற்படுத்தும் இந்த அபாயகரமான அறிவிப்பினை எதிர்த்தும், மின் விநியோகத்தை தனியார் மயமாக்கும் சிந்தனையை கைவிடக்கோரியும், 18.05.2020 அன்று தமிழ்நாடு முழுவதும் அனைத்து பிரிவு அலுவலகங்கள், கோட்ட, வட்ட அலுவலகங்கள் மற்றும் சென்னை தலைமையகத்தில் எழுப்பப்பட்ட ஒலிமுழக்கங்கள் வாயிலாக பொறியாளர்களும், பணியாளர்களும் தங்களின் எதிர்ப்பினை ஒருமித்த குரலில் வெளிப்படுத்தினர்.

நமது உறுப்பினர்களின் சட்டத் திருத்த மசோதா 2020ன் மீது உள்ள விழிப்புணர்வு பிரமிக்க வைத்தது. அதன் விளைவு தமிழ்நாடு முழுவதும் நமது மின்வாரிய அனைத்து பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களும் திடீரென்று ஏற்பாடு செய்த ஒலி முழக்க ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்தது. இந்த விழிப்புணர்வு அதீத முழு வேகத்துடன் நமது உறுப்பினர்கள் தொடர்ந்து செயலாற்றிட கேட்டுக்கொள்கிறேன்.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக 01.06.2020 அன்று சட்டத்திருத்த மசோதா 2020 வை எதிர்க்கும் வகையில், கோரிக்கை அட்டை அணிந்து எதிர்ப்பினை தெரிவிப்பது என்று அகில இந்திய அளவில் முடிவு செய்யப்பட்டது. அது மட்டுமல்லாமல் மக்கள் பிரதிநிதிகள் அனைவரையும், அவர்களது குரலினை எழுப்பிட அவர்களுக்கு முறையீடு செய்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் 01.06.2020 அன்று நடக்க இருக்கின்ற எதிர்ப்பு நாளை நாம் அனைவரும் அனைத்து தொழிற்சங்கங்களுடன் ஒன்றினைந்து கோரிக்கை அட்டை அணிந்து வெற்றி பெறச் செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார சட்டத்திருத்த மசோதாவின் பாதகமான அம்சங்களை எடுத்துக்கூறி, சட்டத்திருத்த மசோதாவை கைவிடக்கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பிரதமருக்கு கடிதம் வாயிலாக ஆட்சேபனை தெரிவித்துள்ளார். அதற்காக தமிழக

முதல்வர் அவர்களுக்கு பொறியாளர் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

நமது சங்கத்தின் தொடர் முயற்சியினால், 2016ம் ஆண்டு பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்களுக்கான உத்தேச முதன்மைப்பட்டியல் 332 நபர்களுக்கு வெளியிடப்பட்டுள்ளது.

நமது சங்கத்தின் தொடர் முயற்சியின் பலனாக, பல்வேறு கட்ட தடைகளைத் தாண்டி, பதவி உயர்வு முறை உள்முகத்தேர்விலிருந்து பதவி உயர்வு மாற்றம் செய்யப்பட்டு, முதல் முறையாக பதவி உயர்வு முறையில், தொழில்நுட்ப உதவியாளர் / இயந்திரவியல் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை பதவி உயர்விற்கான தகுதிகாண் அறிக்கை (80 தொழில்நுட்ப உதவியாளர் / இயந்திரவியல்) நிர்வாகத்தால் கோரப்பட்டுள்ளது. அனல் மின் நிலையங்கள் மற்றும் உற்பத்தி வட்டங்களில் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை (இயந்திரவியல்) பதவி உயர்வுகள் விரைவில் பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது நம் சங்க வரலாற்றில் ஒரு மைல்கல். பொறியாளர் சங்க வெற்றி கிரீடத்தில் மேலும் ஒரு வைரக்கல்.

இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை பதவி உயர்வு மற்றும் இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வு அனைத்து தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் DPC நடத்துவதற்கான பணிகள் விரைவு படுத்தப்பட்டு விரைவில் பதவி உயர்வுகள் பெற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செயற் பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வுகள் 78 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற அனைத்து பொறியாளர்களுக்கும் வாழ்த்துக்கள்.

நமது சங்கத்தின் தொடர் முயற்சிகளின் பலனாக, உதவி செயற் பொறியாளர் / மின்னியல் பதவி உயர்விற்கான பட்டியல் 428 உதவிப் பொறியாளர்களுக்கும் 165 இளநிலைப் பொறியாளர்களுக்கும் கோரப்பட்டுள்ளது. நமது உறுப்பினர்கள் விரைவில் PAR அனுப்பிடவும், பொறுப்பாளர்கள் வட்டங்களிலிருந்து உரிய காலத்திற்குள் Suitabilty report அனுப்பப்படுவதை உறுதி செய்யவும் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல் உள்முகத்தேர்வுக்கான தேர்வு பட்டியல் மற்றும் பணியிட ஒதுக்கீடு பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் வெளியிடப்படும்.

தமிழக அரசு தனது பணியாளர்களுக்கு ஈட்டிய விடுப்பு சரண்டர் நிறுத்தம் மற்றும் ஜுன் 2021 வரை பஞ்சப்படி உயர்வு நிறுத்தம் ஆகிய உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. எனவே, இத்தகைய உத்தரவுகள் மின்வாரிய பணியாளர்களுக்கு பொருந்தாது என்றும், ஏற்கனவே கடந்த காலங்களில் மின்வாரியங்களில் அமல்படுத்தப்படுத்தப்படவில்லை என்றும், தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு சார்பாக வாரியத் தலைவரிடம் 30.04.2020 அன்று முறையீடு செய்யப்பட்டுள்ளது.

ஈட்டிய விடுப்பு ஒப்பளிப்பதை ஓராண்டு நிறுத்தி வைப்பதற்கு இதுவரையில் இல்லாத வகையில் Class-I & II அலுவலர்களுக்கு உடனடியாக நிறுத்தி வைப்பதற்கும், Class-III & IVல் உள்ள பணியாளர்களுக்கு 9A நோட்டீஸ் கொடுத்து தொழிற் சங்கங்களிடம் கருத்தினை கேட்டு முடிவெடுப்பதற்கும் வாரியம் அனுமதி அளித்துள்ளதாக தெரிய வருகிறது.

தமிழக அரசைத் தொடர்ந்து மின்சார வாரியத்திலும் பணியாளர்கள் ஓய்வு பெறும் வயதை 59 ஆக உயர்த்துவதற்கு வாரியக் கூட்டம் அனுமதி அளித்துள்ளது. விரைவில் ஆணைகள் வெளியிடப்படும்.

சங்கத்தின் சமுதாயப்பணிகளின் தொடர்ச்சியாக, மின்வாரிய தலைமையகத்தில் பணியாற்றும் 2000 பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கும் கொரோனா நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும், தமிழக அரசினால் அனுமதிக்கப்பட்ட ஹோமியோபதி மருந்தான “ஆர்சனிகம் ஆல்பம் 30” வழங்கப்பட்டது. இந்நிகழ்வு வாரிய

மட்டத்தில் மட்டுமல்லாமல் உயர் அதிகாரிகளின் பாராட்டையும் பெற்றுள்ளது.

தமிழகம் முழுவதும் குறிப்பாக சென்னையில் கொரோனா நோய் தொற்று பாதிப்பு அதிகரித்து வரும் வேலையில், அனைத்து பணியாளர்களும் வீடுகளில் சமூக இடைவெளியினை பின்பற்றியும், முறையான பாதுகாப்பு மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து கடைபிடித்தும், கொரோனாவை வென்று தடையில்லா மின்சாரம் வழங்கிட அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி,

அன்புடன்,
**V.S.**சம்பத்குமார்.
பொதுச் செயலாளர்.

**மாநில அரசுகள் கடன் வாங்கும் உச்ச வரம்பை உயர்த்த மானியங்களை நேரடியாக அளிக்க வேண்டும் (DBT) – மத்திய அரசு நிபந்தனை**

## States have been given time till March 2021 to roll out the DBT.

**DBT a condition for higher borrowing**

There is also an untied component – 0.5%. ***If the State governments do not follow the Centre's prescription on the DBT for the farm sector, they would not be eligible to raise the borrowing limit by 0.15%, which forms part of the overall figure of 0.25% for the power sector reforms***.

There are three other areas — “one nation, one ration card,” ease of doing business and reforms in urban local bodies/utilities. Each of the four areas carries a weight of 0.25% each. If a State implements the Centre's stipulations in the three out of the four areas, it will get 0.5% additionally.

There are two other components in the power sector reforms — reduction in aggregate technical and commercial (AT&C) losses and narrowing the gap between the Average Cost of Supply (ACS) and the Average Revenue Realisation (ARR), which is ₹ 2.21 per unit in the case of Tamil Nadu. The additional borrowing limit of 0.1% has been earmarked for the two components.

Besides, the reforms in urban local governance include revision of property tax rates and user charges for water and sewer connections. The deadline for the revision is January 15, 2021. This is another area that is regarded by those in power, regardless of the party, as a “hot stove.” For years together, the rates and user charges have remained untouched in the State, despite recommendations of the successive State Finance Commissions in this effect.

The State government has no problem in dealing with “one nation, one ration card” (ONOR) and the ease of business doing. As a matter of principle, it decided to implement the ONOR, which was, on an experimental basis, launched in two districts in January. As for the other, the State has a law which can be strengthened to cater to the Centre's stipulations.

If Tamil Nadu is able to make use of the additional limit fully, it can go up to about ₹ 1.04 lakh crore at the fiscal deficit-GSDP ratio of 5%. For the current year, the State government's plan for net borrowing is about ₹ 62,000 crore at the ratio of 2.84%. There is an indication that it may borrow ₹ 25,000 crore - ₹ 30,000 crore more.

Coutesy : **The Hindu – e Paper**
Chennai, May 17, 2020 23:55 IST

மாநில அரசுகள் கடன் வாங்கும் உச்ச வரம்பை உயர்த்த மானியங்களை நேரடியாக அளிக்க வேண்டும் (DBT) – மத்திய அரசு நிபந்தனை குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு எழுதிள்ள கடிதம்
"..Imposing needlessly onerous conditions on borrowings will constrain the State Governments in finding funds to meet essential expenditure.."

**Press Release No. 346** **Date: 18.05.2020**

**PRESS RELEASE**

**Text of the D.O. letter dated 18.5.2020 of Thiru. Edappadi K. Palaniswami, Hon'ble Chief Minister of Tamil Nadu, addressed to Shri. Narendra Modi, Hon'ble Prime Minister of India.**

"I thank the Prime Minister and the Government of India for having announced the five tranche economic relief package, which I hope will help to revive the Indian economy. The additional allocation for MNREGA and for establishing Infectious Diseases Blocks in district hospitals and public health laboratories at the Block level are very significant measures.

While welcoming this initiative which combines fiscal sustainability with what is required for different sectors, I would like to draw your attention to the needlessly onerous conditions that have been attached to the additional borrowing limits that have been approved for State Governments in Ministry of Finance's Letter F. No.40(06)/PF-S/2017-18/Vol V dated 17th May, 2020.

The States sought the additional borrowing limit, beyond 3 percent of GSDP mainly because of the significant shortfall in revenues due to the lockdown imposed in the wake of the Covid 19 pandemic. There are also large additional expenditure commitments. These are borrowings by the State Government, which have to be repaid from future tax revenues of the States. They are not grants from the Centre. To attach needlessly demanding conditionalities to the additional borrowing requirements appears to be unreasonable.

Aggressively pushing a reform agenda on which a consensus is yet to be developed at a time when States have approached the Centre for additional borrowing out of sheer desperation, is not in keeping with the spirit of co-operative federalism. Ideally, the proposed reforms ought to have been discussed in detail with the States, a consensus developed depending on the specific conditions in each State and the reforms linked to special Central Covid grants, and not to additional borrowing by the State. Linking the Central Government's power under Article 293(3) of the Constitution to permit additional borrowing by the States to conditionalities, is unprecedented.

In Tamil Nadu's context, while in some of the four major areas of reform required by the Government of India to avail of the additional borrowing, the State Government has already undertaken the reforms without expecting any financial assistance, there are some areas, most specifically in the area of power distribution reforms, which are politically sensitive. These issues have been

repeatedly raised by me in communications to the Prime Minister as well. I have raised the issue in the context of the proposed changes in the Electricity Act. **Our Government is strongly opposed to the idea of removing the Free Power Supply to farmers.** It has been our stand that the mode of disbursement of subsidy should be left to the State Governments themselves. Since a consensus is yet to emerge on these issues, I request you to instruct the concerned Ministries to remove the requirements to reform the power sector from amongst the proposed conditionalities and also to allow greater latitude to States in implementing a reform agenda.

Imposing needlessly onerous conditions on borrowings will constrain the State Governments in finding funds to meet essential expenditure in the wake of a serious financial situation. I am confident you will appreciate and understand the difficulties that States face at this time and instruct that the necessary changes be made to the relevant guidelines."

## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி

மின்வாரியத்தில் பணிபுரியும் சுமார் 80 ஆயிரம் பணியாளர்களின் நலன், தமிழகத்தின் **180** லட்சம் வீட்டு மின் நுகர்வோர், **22** லட்சம் விவசாயமின் நுகர்வோர், சாமாண்ய மக்கள் ஆகியவர்களின் நலன் காக்கும் விதமாக 2014ல் அன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சி இத்தகைய மின்சார சட்டத் திருத்தங்களை கடுமையாக எதிர்த்தது. தற்போது தொடர்ந்து தங்களின் சீரிய தலைமையிலான தமிழக அரசும் இத்தகைய மின்சார சட்டத்திருத்தங்களை தொடர்ந்து எதிர்த்து வெற்றி கண்டுவருகிறது. விவசாயத்திற்கான இலவச மின்சாரம் மூலமே தமிழகத்தின் உணவு உற்பத்தி தன்னிரைவு பெற இயலும் என்பதையும் கருத்தில் கொண்டு தாங்கள், தற்போது கொண்டு வரப்பட்டுள்ள மின்சார சட்டத்திருத்த மசோதாவில் உள்ள பாதகமான அம்சங்களை கூறி, வரைவு திருத்தங்களை கைவிடுமாறு தாங்கள் மாண்புமிகு பாரதபிரதமர் அவர்களுக்கு 09.05.2020 எழுதியுள்ளகடிதம் தமிழக மக்கள் அனைவரின் வாழ்விலும் விளக்கேற்றுவதாக உள்ளது.

மின்சார சட்டத்திருத்த மசோதா 2020 ஐ கைவிட கோரி தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் என்றும் துணை நிற்கும் என்று கூறி, மீண்டும் ஒருமுறை தங்களின் நடவடிக்கைகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**– பொறியாளர் சங்கம்**

திருக்குறள் :
வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்

GOVERNMENT OF KERALA

Pinarayi Vijayan

CHIEF MINISTER

D.O. No. 924/2020/CM, Dated 18.05.2020

Dear Shri. R.K. Singh ji,

I would like to bring to your kind attention certain important issues pertaining to the proposed Electricity Amendment Bill, 2020. There are certain provisions in the bill, which if enacted will substantially encroach into the domain of the State Governments. Provision of electricity to all is part of a social obligation which the State Governments are bound to discharge.

It may be taken note of that as Electricity is a subject enumerated as Item 38 in the Concurrent List of the Seventh Schedule in Constitution of India, wider consultations should have been there in the first place. The Government of Kerala has apprehensions regarding following provisions in the new amendment bill.

1. The amendment intends to put restrictions on continuing with subsidies and cross-subsidies hitherto being given to consumers. The need for providing power to poorer sections of the society and for the agricultural sector has to be viewed from a holistic perspective. It does add to productivity and value addition in the economy and total social benefits outweigh the costs. The alternative option of providing subsidy through direct benefit transfer is a circuitous way of doing the same thing. This also encroaches upon the authority of the State Regulatory Commissions.

2. The appointment of members to the State Regulatory Commissions which are presently done by the States are now being taken away by giving the power of selection to the Central Government.

3. The formation of a new authority at the Central level, namely, Electricity Contract Enforcement Authority (ECEA), can have consequences like enforcement of contracts which are quite unfair, like the ones in which Electricity distributors will have to pay for fixed charges even without consuming a single unit of power. In such cases arbitration between parties can be a better option.

4. There are operational issues like a dating purchase from Renewable Sources of energy. The amendment stipulates that

*"3A National Renewable Energy Policy - The Central Government may, from time to time, after such consultation with the State Governments, as may be considered necessary, prepare and notify a National Renewable Energy Policy for*

*(Contd........ 2)*

141, 3rd Floor, North Block
Government Secretariat
Thiruvananthapuram Pin 695001

T 0471 2333241, 2333812, 2333610 F 0471 2333489
E chiefminister@kerala.gov.in
facebook.com/cmokerala twitter.com/cmokerala
www.keralacm.gov.in

Residence
Cliff House
T 0471 2318406, 2314853

*the promotion of generation of electricity from renewable sources of energy and prescribe a minimum percentage of purchase of electricity from renewable and hydro sources of energy."*

While there is no difference of opinion that use of renewable source of energy should be encouraged, the present amendment which empowers the Central Government to prescribe a minimum percentage will deprive the States and the power distribution companies to make purchase decisions based on market trends in prices.This should ideally be left to the States, especially in places where distribution is in public sector.

5. The amendment allows a distribution licensee to appoint a franchisee without any license from the State Commission by inserting a proviso to the section 14 of the Principal Act.

*"Provided also that a franchisee shall not be required to obtain any separate license from the appropriate State Commission and such distribution licensee shall continue to remain responsible for distribution of electricity in its area of supply:";*

This will be against the policy of having a check on the entities coming into an important sector like power distribution.

It is felt that all these proposed measures are intended to encourage further privatisation and reduced role for the State Governments.It is our opinion that pushing for further privatisation in the electricity sector will not help to solve the problems which have arisen in generation and distribution areas, especially since the initiation of economic reforms. In these circumstances, there is necessity for wider consultations with the States and this needs to be done afresh after withdrawing the bill in the present form as it has distinct features of over centralisation.

It is requested that the further discussions may be held with the States for arriving at a consensus and providing flexibility for the State specific situations. In order to enable this, the bill it its present form may not be proceeded further.

With regards,

Yours sincerely,

Pinarayi Vijayan

Shri. R.K. Singh
Hon'ble Minister of State *(Independent Charge)*
for Power and New & Renewable Energy and
Minister of State in the Ministry of Skill Development
and Entrepreneurship
Government of India,
Shram Shakti Bhawan, New Delhi - 110001.

**விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் மின்சார சட்டத் திருத்தம் 2020 உரிய முறையில் எதிர்ப்பு தெரிவித்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பொறியாளர் சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட கடிதம்**

பெறுநர் : 11.05.2020

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,**

தமிழகஅரசு.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் - மின்சார சட்டத் திருத்தம் 2020 - உரிய முறையில் எதிர்ப்பு - தெரிவித்ததற்கு - நன்றி தெரிவித்தல் - தொடர்பாக.

வணக்கம்.

தமிழக மக்களின் நலனை மட்டுமே கொள்கையாக கொண்டு சிறப்பான ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்கள் தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

இன்று கொரோனா தாக்குதலை எதிர்த்து போராடுவதில் தங்களின் ஆளுமையில், சீரான தலைமையில், மக்கள் நல்வாழ்வுதுறை தமிழகத்தில் எடுத்துவரும் நடவடிக்கையால் மிகப்பெரிய தொற்று நோய் பரவலை தடுத்து, மக்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல், இந்திய மாநிலங்களில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது. இதற்காக எங்களின் பாராட்டுதலையும் போற்றுதலையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறோம்.

காவிரி படுகையை வேளாண் மண்டலமாக அறிவித்தது, நீர்நிலைகளை மேம்படுத்தியது, ஒரே ஆண்டில் 11 மருத்துவ கல்லூரிகளை புதிதாக தமிழகத்தில் உருவாக்கியது, காவிரி உரிமைக்காக தொடர்ந்து போராடி மாநில உரிமைகளை நிலைநாட்டுவது போன்ற மக்கள் நலப்பணிகளில் சிறப்பாக செயல்பட்டுவரும் தங்களின் சீரான தலைமையிலான தமிழக அரசை மீண்டும் ஒருமுறை பாராட்டுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

தமிழகத்தில் தற்பொழுது எடுக்கப்பட்டுவரும் கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்கும் பணியில் பல அரசுத்துறை நிறுவனங்களின் பணியாளர்கள் மட்டுமே, தங்கள் உயிரையும் பணயம் வைத்து போராடி வருகிறார்கள் என்பதை தாங்கள் கவனத்துடன் பார்த்து வருகிறீர்கள் என்பதை நாங்கள் அறிந்து மிகவும் பெருமை கொள்கிறோம். களப்பணியில் முன்நிற்கும் பணியாளர்களுக்கு பல சலுகைகளையும், பாதுகாப்பினையும், அவர்கள் தம் குடும்பத்தினர் நலனுக்காகவும் தங்கள் அரசாங்கம் எடுத்துவரும் நலதிட்டங்களுக்காக எங்களின் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போதைய கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்கும் பணியாகட்டும், இயற்கை பேரிடர்களான கஜா, ஒக்கி, தானே, பெருவெள்ளம் ஆகிய இக்கட்டான தருணங்களில் தமிழக அரசுத்துறையான மின்வாரியமும் அதன் பணியாளர்களும் தங்களின் நலன், தங்கள் குடும்பத்தினரின் நலன் ஆகியவற்றை மறந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி, தமிழக முதல்வர் அவர்களின் சிறப்பான வழிகாட்டுதலுடன் மிக குறைந்த காலத்திலேயே சேதங்கள் முழுவதையும் சரி செய்து மக்களுக்கு மின்சாரத்தை கொண்டு சேர்த்திருக்கிறோம். இப்பணிகள் தமிழக அரசின் மீது நற்பெயரையும் பாராட்டையும் பொதுமக்களிடம் ஈட்டித்தந்தது. இவை அனைத்தும் மின்சார வாரியம் தமிழக

அரசின் பொதுத்துறை நிறுவனமாகவே இருந்ததால் சாத்தியமாயிற்று.

தமிழகத்தில் மின் துறையை பொதுத்துறை நிறுவனமாகவே தொடர்ந்து இயக்கிடும் கொள்கையில் உறுதியாக இருக்கும் தமிழக அரசுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் எங்களின் நன்றி.

தற்போது மத்திய மின்துறையால் கொண்டு வரப்பட்டிருக்கும் மின்சார சட்டத்திருத்த மசோதா 2020 முன்வடிவு, மின் விநியோக கட்டமைப்பினை தனியாருக்கு அளிப்பது, வீடு மற்றும் விவசாயக் பயனீட்டாளர்களை மிகவும் பாதிக்கும் மானியத்தை நேரடியாக அளிக்கும் முறை (Direct Benefit Transfer), மாநில அரசின் அதிகாரத்தினை எடுத்து மத்திய ஒப்பந்த அமலாக்க ஆணையத்திற்கு அளித்தல், மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கான தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அதிகாரத்திலிருந்து எடுத்து மத்திய அரசுக்கு அளித்தல் உள்ளிட்ட முன்வடிவுகள் ஒட்டுமொத்தமாக மின்துறையில் மாநில உரிமைகளை பறித்தல், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் நலன்களை புறம் தள்ளுதல், தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்கான விலையையும் அதற்கான தொகையையும் நேரடியாக மத்தியிலிருந்து பெறுவது, இதனால் மாநில மின் வாரியங்களுக்கும் தமிழக அரசுக்கும் மிகுந்த நிதிச்சுமையை ஏற்படுத்துதல், மானியத்தை நேரடியாக அளிக்கும் முறை (Direct Benefit Transfer) மூலம் விவசாயிகளும், நெசவாளர்களும், குடிசைவாசிகளும், வீட்டு பயனீட்டாளர்களும் மானியமில்லாத உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை செலுத்தி, பின்னர் அவர்களுக்கு மானியத்தை நேரடியாக அளித்து, பின்னர் படிப்படியாக மானியத்தை விலக்கி கொள்வது, பொதுமக்களுக்கு வழங்கப்படும் மின்சார விலையினை உயர்த்தி சாமானியர்களுக்கு மின்சாரத்தை எட்டாகனியாக்கும் நடவடிக்கை, தனியாரை மின் விநியோகத்தில் நேரடியாக ஈடுபடுத்துவதன் மூலம் லாபம் ஈட்டக்கூடிய பகுதிகளை தனியார் எடுத்துக் கொள்வதும், மற்ற லாபம் ஈட்ட முடியாத பகுதிகளை அரசுதுறை நிறுவனமான மின் வாரியமே சுமக்க வேண்டிய கட்டாயம், போன்ற மிகவும் பாதகமான பல அம்சங்களை கொண்டுள்ளது.

மின்வாரியத்தில் பணிபுரியும் சுமார் 80 ஆயிரம் பணியாளர்களின் நலன், தமிழகத்தின் **180** லட்சம் வீட்டு மின் நுகர்வோர், **22** லட்சம் விவசாய மின்நுகர்வோர், சாமான்ய மக்கள் ஆகியவர்களின் நலனை காக்கும் விதமாக 2014ல் அன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர்அம்மாஅவர்களின் ஆட்சி இத்தகைய மின்சார சட்டத் திருத்தங்களை கடுமையாக எதிர்த்தது. தற்போது தொடர்ந்து தங்களின் சீரிய தலைமையிலான தமிழக அரசும் இத்தகைய மின்சார சட்டத் திருத்தங்களை தொடர்ந்து எதிர்த்து வெற்றி கண்டு வருகிறது. விவசாயத்திற்கான இலவச மின்சாரம் மூலமே தமிழகத்தின் உணவு உற்பத்தி தன்னிறைவு பெற இயலும் என்பதையும் கருத்தில் கொண்டு தாங்கள், தற்போது கொண்டு வரப்பட்டுள்ள மின்சார சட்டத் திருத்த மசோதாவில் உள்ள பாதகமான அம்சங்களை கூறி, வரைவு திருத்தங்களை கைவிடுமாறு தாங்கள் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு 09.05.2020 எழுதியுள்ள கடிதம் தமிழக மக்கள் அனைவரின் வாழ்விலும் விளக்கேற்றுவதாக உள்ளது.

மின்சார சட்டத் திருத்த மசோதா 2020 ஐ கைவிட கோரி தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் என்றும் துணைநிற்கும் என்று கூறி, மீண்டும் ஒருமுறை தங்களின் நடவடிக்கைகளுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள
**V.S.**சம்பத்குமார்
பொதுச் செயலாளர்

***BOARD ORDERS***

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**
**(ABSTRACT)**

TANGEDCO – Allowances – Measures to tide over the financial constraints in view of the severe fiscal crisis arising out of COVID-19 pandemic – Freezing of Dearness Allowance to TANGEDCO Employees, Pensions / Family Pensioners at current rates till July 2021 – Adoption of Government Orders – Orders – Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

(Per.) CMD TANGEDCO Proceedings No.86

Dated 08.05.2020
Chithirai 25
Sarvari Varudam
Thiruvalluvar Aandu 2051.

Read:

I. (Per.) FB TANGEDCO Proceedings No.9 (SB), Dated 02.03.2018.
II. (Per.) FB TANGEDCO Proceedings No.10 (SB), Dated 02.03.2018.
III. (Per.) FB TANGEDCO Proceedings No.191 (SB), Dated 18.10.2019.
IV. (Per.) FB TANGEDCO Proceedings No.192 (SB), Dated 23.10.2019.
V. G.O.Ms.No.232, Finance (Allowances) Department Dated 27.04.2020.

---

**PROCEEDINGS:**

In the Board's Proceedings first and second read above, orders were issued for Revision of Pay, Dearness Allowance and other allowances with effect from 01.01.2016 taking into account the pay drawn by the employees / officers on 01.12.2015 with monetary benefit from 01.10.2017. In the said orders, among other things it has been ordered that the revised rates of Dearness Allowance under the revised pay structure were granted as shown below:

**Sl.No.Date from which payableRate of Dearness Allowance (per month)**101.01.20160 (zero)201.07.20162% of Basic Pay301.01.20174% of Basic Pay401.07.20175% of Basic Pay

2. In the Board's Proceedings third and fourth read above, orders were issued sanctioning revised rate of Dearness Allowance to the TANGEDCO Employees and Pensioners / Family Pensioners at the rate of 17 Percent with effect from 1$^{st}$ July 2019 following the orders issued by the Government of Tamil Nadu.

3. In the Government order fifth read above, orders were issued to the State Government employees, teachers and Pensioners / Family Pensioners, freezing the Dearness Allowance at current rates till July 2021. It also has been ordered that the additional installment of Dearness Allowance payable to State Government employees, teachers and Government Pensioners / Family Pensioners, due from 1$^{st}$ January 2020 shall not be paid. Further, the additional installments of Dearness Allowance due from 1$^{st}$ July 2020 and 1$^{st}$ January 2021 shall also not be paid. The adoption of the said Government Order in TANGEDCO has been examined in detail.

4. After careful consideration, it has been decided to adopt the Government Orders and it is hereby ordered that the Dearness Allowance to the employees, Pensioners / Family Pensioners of TANGEDCO be frozen at current rates till July 2021. The additional installment of Dearness Allowance payable to Employees, Pensioners / Family Pensioners of TANGEDCO due from 1st January 2020 shall not be paid. The additional installments of Dearness Allowance due from 1st July 2020 and 1st January 2021 shall also not be paid.

5. However, Dearness Allowance at current rates will continue to be paid. As and when the decision to release the future installment of Dearness Allowance due from 1st July 2021 is taken by the Government of Tamil Nadu, the rates of Dearness Allowance as effective from 1st January 2020, 1st July 2020 and 1st January 2021 will be restored prospectively and will be subsumed in the cumulative revised rate effective from 1st July 2021. No arrears for the period from 1st January 2020 till 30th June 2021 shall be paid.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR )**

**S. VINEETH**
**SECRETARY (A/c)**

---

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**
(ABSTRACT)

TANGEDCO – SECRETARIAT BRANCH – Disaster Management – Covid-19 confirmed cases – Measures to take care of frontline staff – Reimbursement of the medical expenses to the employees – Orders – Issued.

---

(SECRETARIAT BRANCH)

(Per.) CMD TANGEDCO Proceedings No.79

Dated 05.05.2020
Saarvari Varudam
Chithirai-23
Thiruvalluvar Aandu, 2051

READ:

G.O.(Ms.) No.180 Revenue and Disaster Management Department Disaster Management Wing, D.M.I. Section, dated 04.04.2020.

**PROCEEDINGS:**

In the Government Order read above, among other things, orders have been issued to the effect that all categories of officials belonging to the Health and Family Welfare, Revenue & Disaster Management, Police, Sanitary and Conservancy employees of Rural / Urban local bodies dealing with prevention work and other departments who were directly involved in COVID-19 prevention, identification, quarantine and treatment activities, etc., be provided with free treatment for confirmed COVID-19 positive cases needing hospital based treatment whether in Government of Private institutions. This order may be reviewed after 31.05.2020, based on the situation at that time and decision will be taken.

2. Based on the above orders, certain Trade Unions have represented requesting to adopt the said orders with a view to safeguard the Officers, Engineers and Employees of the Corporation if they

are affected by the said disease while attending the essential official duties. Their requests have been carefully examined and it has been decided to take care of employees who are frontline staff by incurring treatment expenditure whether in Government or Private Hospitals.

3. Accordingly, it is hereby ordered that the treatment expenditure for confirmed **COVID-19 positive cases in respect of frontline staff of TANGEDCO / TANTRANSCO needing hospital based treatment whether in Government or Private Institution, be borne by this Corporation.**

4. The COVID-19 confirmed frontline employee shall approach either in Government of Private Hospital for treatment. **The Controlling Officer of the employee shall report to the headquarters via e.mail the medical treatment / arrangement being taken by the employee. The employee has to pay the medical expenses directly to the hospital and then seek cash reimbursement.**

5. All the Chief Engineers / Superintending Engineers / Head of Departments are hereby directed to send the proposal for reimbursement of the cost of treatment for confirmed COVID-19 positive cases to the Secretary / TANGEDCO along with the followings documents / particulars for sanction:-

a) Chief Engineers / Superintending Engineers report to the effect that the confirmed COVID-19 employee is a frontline staff;
b) Discharge Summary in original along with the seal and signature of the Hospital;
c) Hospital main bill along with the seal and signature of the hospital authorities;
d) Endorsement 'Paid by me' on the back side of the bills'

**VIKRAM KAPUR**
**CHAIRMAN CUM MANAGING DIRECTOR.**

---

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**
வழங்கும்
கல்வி ஊக்குவிப்பு பரிசளிப்பு
+ 2 மாணவர்களுக்கு மேட்டூர் அனல் மின் நிலைய கிளையின் சார்பாக வழங்கும்
பொர்.P.E.சேதுபதி நினைவு கல்வி ஊக்குவிப்பு பரிசு 2019

M.T.P.S. கிளையை சங்கம் பாராட்டி மகிழ்கிறது

| Sl.No. | Name | Parent | Branch | Marks | % | Remarks |
|---|---|---|---|---|---|---|
| 1 | **Meenakshi.R** | Raman.N AEE/S/230KV SS / Koviloor / Karaikudi | Sivagangai | 588/600 | 98 | First Prize Rs.5000/- |
| 2 | **Sameeha.P.A** | Abdulkader.P.S JE/Civil Gr.I / Projects / Investigation | Tirunelveli | 563/600 | 93.8 | Second Prize Rs.3000/- |
| 3 | **Sandiyaa.B** | Bharathi Rajan.V JE II / Enforcement | Cuddalore | 560/600 | 93.3 | Third Prize Rs.2000/- |

கல்வி ஊக்குவிப்பு போட்டியில் கலந்து கொண்ட மற்ற மாணவர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | Santhosh Kumar.S | Saravanakumar.R JE II Gr. / Enforcement | Tirunelveli | 543/600 | 90.5 |

10ம் வகுப்பு மாணவர்களுக்கு இராமநாதபுரம் கிளையின் சார்பாக வழங்கும்
பொர்.J.செல்வராஜ், நினைவு கல்வி ஊக்குவிப்பு பரிசு 2019

ராமநாதபுரம் கிளையை சங்கம் பாராட்டி மகிழ்கிறது

| Sl.No. | Name | Parent | Branch | Marks | % | Remarks |
|---|---|---|---|---|---|---|
| 1 | **Monika.E** | Ethiraj.N<br>JE II Gr./110 KV SS / Thirumazhisai | Chenglepet | 491/500 | 98.2 | First Prize Rs.5000/- |
| 2 | **Anuvaishnavi.S** | Meenakshi.P<br>AE/O&M/Gobi EDC | Gobi | 490/500 | 98 | Second Prize Rs.2000/- |
| 3 | **Kanishka Prabha.M** | Muthukumar.G<br>TA/Mech./Instn.I / TTPS | Tuticorin | 478/500 | 95.6 | Third Prize Rs.1000/- |
| 4 | Velayutham.S.K | Senthil Krishnan.V<br>AEE / S / 400 KV SS / Kayathar | Tuticorin | 478/500 | 95.6 | Third Prize Rs.1000/- |

கல்வி ஊக்குவிப்பு போட்டியில் கலந்து கொண்ட மற்ற மாணவர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | Kalika Priyadarshini.E | Esakki Pandi.K<br>AE / MM / Generation Circle | Tirunelveli | 477/500 | 95.4 |
| 6 | Gayathri Devi.N | Nattar Raja.P<br>AE / Boiler Mtce. / TTPS | Tuticorin | 474/500 | 94.8 |
| 7 | Harshini.Gna | Gnana Sambanthan.I<br>JE II Gr. / Enforcement | Tirunelveli | 471/500 | 94.2 |
| 8 | Hariharan.M.V | Vinayakan.M<br>JE II Gr. / 110/22 KV Sinthalavadampatty SS | Dindigul | 467/500 | 93.4 |
| 9 | Neha Lincy.J | James.V<br>AE/O&M/Kannivadi Section | Dindigul | 460/500 | 92 |
| 10 | Vijay Krishnan.M | Mohan.G<br>AEE/S/230KV SS / Patteswaram | Thanjavur | 459/500 | 91.8 |
| 11 | Aashish Raj.T | Rajasekar.T<br>Sr.D'man / O/o.EE/Civil / Building Dn. / HQ | Chennai | 425/500 (CBSE) | 85 |

## மின்சார சட்டத் திருத்தங்கள் - 2020

மின்சார சட்டம் 2003 க்கான திருத்தங்களை கொண்டுவர சில ஆண்டுகளாக மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஏப்ரல் மாதம் 17ம் தேதியன்று, சட்டத் திருத்தங்களுக்கான முன்வரைவை, மத்திய அரசு வெளியிட்டது. அது குறித்த கருத்துக்களை 21 நாட்களுக்குள் தெரிவிக்க கேட்டுக் கொண்டது. மாநில அரசுகள், தொழிற்சங்கங்கள் உள்பட பல தரப்பினரும் கேட்டுக் கொண்டதால், காலக் கெடு ஜூன் 5ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆண்டுகளில், மின் விநியோக நிறுவனங்கள். தங்களது வருவாயில் 30 சதவிகிதம் அளவுக்கு மின் சக்தியை வாங்குவதற்கு செலவழிக்கின்றன. 1990ம் ஆண்டு, உலக வங்கியின் பரிந்துறையின் படி, மின் சக்தி கட்டணம் இருபகுதிகளாக நிலைக்கட்டணம் + எரிபொருள் கட்டணம் (Fixed Charges + Variable Cost).

நிலக்கரி விலையை செயற்கையாக உயர்த்தி மின்சக்தி உற்பத்தி விலையை செயற்கையாக உயர்த்தி விலையை நிர்ணயம் செய்ததாக அதானி நிறுவனம் உள்பட பல நிறுவனங்கள் மீது மத்திய புலனாய்வு துறை வழக்கு தொடர்ந்துள்ளது.

மின் உற்பத்தி நிறுவனங்கள் அமைப்பதற்கான செலவுகளை செயற்கையாக உயர்த்தி, நிலை கட்டணத்தை அதிகப்படுத்தியுள்ளன. மின் உற்பத்தி செலவை அதிகமாக நிர்ணயிப்பதால், விநியோக நிறுவனங்களுக்கு செலவினங்கள் அதிகரிக்கின்றன. மின் சக்தி வாங்கும் ஒப்பந்தங்களில் கண்டுள்ள மின் சக்தி அளவை வாங்காவிட்டால், அதற்கான நிலை கட்டணத்தை செலுத்த வேண்டும். விநியோக நிறுவனங்களின் நிதி இழப்புக்கு இது முக்கிய காரணம்.

2017ம் அண்டு, 2019 ம் ஆண்டு வெளியிடப்பட்ட மத்திய அரசின் மின் தேவை குறித்த அறிக்கைகளில், இந்தியாவின் மின் தேவை 25000 - 75000 மெ.வா வரை தேவைக்கு அதிகமாக கணிக்கப்பட்டிருந்தது. இதனால் மாநில மின் விநியோக நிறுவனங்கள், தங்களுடைய மின் தேவையை விட அதிகமான மின் சக்திக்கு, நீண்ட கால மின்சக்தி ஒப்பந்தங்கள் செய்துக்கொண்டன. இதனால் தேவையற்ற மின் சக்திக்கு நிலைக் கட்டணம் செலுத்த வேண்டி வந்தது. 2018-19ம் ஆண்டில் கர்நாடகாவில் உள்ள தேசிய அனல் மின் நிலையம் சுமார் 4800 கோடி ரூபாயை நிலைக் கட்டணமாகப் பெற்றுள்ளது. 22 % உற்பத்தி திறனில் இயங்கியது. மத்திய மின்சார அமைப்பின் தவறான கணிப்பினால், இந்தியாவில் அனல் உற்பத்தி நிலையங்கள் 56 % திறனில் இயக்கப்பட வேண்டி வந்தது.

சட்டத்திருத்தங்களை பீகார், மேற்கு வங்கம், பாண்டிச்சேரி, ஆந்திரா, தெலுங்கானா, கேரளா, தமிழ்நாடு மாநில அரசுகள் திருத்தங்களை எதிர்த்துள்ளன. இந்தியாவிலுள்ள பெரும்பாண்மையான தொழிலாளர் பொறியாளர் அமைப்புகள் சட்டத்திருத்தங்களை எதிர்த்து பலகட்ட போராட்டங்களை மேற்கொண்டுள்ளன.

" இந்த திருத்தங்கள் மாநில அரசுகளின் அதிகாரத்தை குறைக்கின்றன. அரசியல் சட்டத்தின் 7 அட்டவணையில், மத்திய மாநில அரசுகள் இரண்டுக்கும் பொதுவான அதிகார வரம்புகளுக்கு உட்பட்ட துறைகள் கூறப்பட்டுள்ளன. இந்த பட்டியலில் 38 வது துறையாக மின்துறை இருக்கிறது. இதில் எந்த மாற்றங்கள் செய்வதாக இருந்தாலும், மாநில அரசுகளை கலந்து ஆலோசிக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படவில்லை.

சட்டத்திருத்தங்கள் கொண்டுவருவதற்கு முன், விரிவான கருத்து பரிமாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இந்த சட்டத்திருத்தங்கள் மாநில மின்துறையில், அந்தந்த மாநில அரசுகளின் பங்கு வெகுவாக குறைந்து போகும் என" கேரள முதல்வர் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதற்கிடையில், இந்தியாவில் ஊரடங்கு மே மாதம் 18 ம் தேதியிலிருந்து 31ம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதை அறிவித்த பிரதமர் இந்தியாவின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், தற்சார்புள்ள நாடாக மாற்றவும் 20 லட்சம் கோடி ரூபாய் திட்டங்கள் செயல்படுத்தப்படும் எனத் தெரிவித்தார். அதன் தொடர்ச்சியாக மத்திய நிதித்துறை அமைச்சர் திட்டங்களை அறிவித்து வருகிறார்.

1. மத்திய அரசின் நிர்வாகத்தில் உள்ள பகுதிகளில் (Union Territories) -ல் மின் விநியோகம் தனியார் மயமாக்கப்படும்.
2. அனைத்து மாநிலங்களிலும் மின்வாரியம் தனியார் மயம்.
3. புதிய கட்டணக் கொள்கை.

புதிய கட்டணக் கொள்கையின்படி, விநியோக நிறுவனங்கள் திறனுடன் இயங்க வேண்டும். செயல்பாட்டு தர நிர்ணயங்கள் அமல்படுத்தப்படும். தகுந்த காரணமின்றி மின் தடை செய்யப்பட்டால், மின் விநியோக நிறுவனங்கள் மீது தண்டம் விதிக்கப்படும். விவசாயிகள், ஏழை பயனீட்டாளர்களுக்கு வழங்கப்படும் மானிய உதவிகள் படிப்படியாக குறைக்கப்படும். மின் உற்பத்தி, மின்பாதை அமைப்புகளில் தனியார் பங்களிப்பு ஊக்குவிக்கப்படும். மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு மின்சாரம் வாங்கியதற்கான தொகையினை குறித்த காலத்தில் வழங்க வேண்டும். பயனீட்டாளர்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகையை பயனீட்டாளர்கள் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்த வேண்டும். அனைத்து மின் இணைப்புகளிலும் முன்னதாக பணம் செலுத்தி மின் சக்தி பயன்படுத்தும் வசதியுள்ள (Prepaid Smart Meters) மீட்டர்களை பயன்படுத்த வேண்டும்.

மின்துறை சட்டத் திருத்தங்கள் குறித்து பலத்த எதிர்ப்புகளும், விமர்சனங்களும் எழுந்துள்ளன. மத்திய அரசு திருத்தங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்காமல், எதிர் கட்சிகளை கலந்து ஆலோசிக்காமல், தன்னிச்சையாக மத்திய அரசு திருத்தங்களை கொண்டு வந்துள்ளதாக முன்னாள் நிதித் துறை அமைச்சர் திரு.ப.சிதம்பரம் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் மத்திய அரசு திருத்தங்களை நிறைவேற்றவும், மின் துறையை தனியார் மயமாக்கவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**மத்திய அரசின் நிர்வாகப் பகுதிகளில் தனியார் மயம்**

மின் விநியோகத்தை தனியார் மயமாக்கினால் பயனீட்டாளர்களுக்கு நிறைவான சேவை அளிக்க முடியும். செயல்திறன், நிதிநிலை மேம்படும், மற்ற நிறுவனங்களுக்கு முன் மாதிரியாக இருக்கும் என நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். மும்பை, டில்லி ஆகிய நகரங்களில் தனியார் மின் விநியோகம் நடந்து வருகிறது. ஜம்மு காஷ்மீர், புதுச்சேரி, சண்டிகர் ஆகியவை அதிக மக்கள்தொகை கொண்டவை. இவைகளில் மின் விநியோகப் பணிகளை மேற்கொள்ள முதலீட்டாளர்கள் வரக்கூடும். டில்லியில் மாநில அரசு தனியார் நிறுவகனங்களில் பங்குதாரராக உள்ளது. சண்டிகரில் அரசு மின்துறை லாபத்தில் இயங்கி வருகிறது.

## மின் விநியோகம் தனியார் மயம்

மின் விநியோக நிறுவனங்கள், மாநிலத்தின் ஒரு பகுதியை முழுமையாகவோ அல்லது குறிப்பிட்ட பகுதிகளை Franchise வழியாக அனுமதிக்கலாம் என்பது சட்டத் திருத்தம். இது போன்று தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்க மாநில ஒழுங்கு முறை ஆணையத்தின் அனுமதி தேவையில்லை. தனியார் அனுமதிக்கு எந்த வித கட்டுப்பாடும் இல்லாமல் போகும். மாநில அரசுகள் நிதி நெருக்கடியால் பாதிக்கப்படும் என கேரள முதல்வர் கூறியுள்ளார். தனியார்மயத்தை மறைமுகமாக புகுத்துவதற்கு இந்த வழி பின்பற்றப்படுவதாக மின் துறை நிபுணர்கள் கருதுகின்றார்கள்.

## இந்தியாவில் தனியார்மயம்

இதுவரையில் கிடைத்த அனுபவப்படி அதிக வருவாய் கிடைக்கும் விநியோகப் பகுதிகளில் மட்டுமே, தனியார் துறையினர் மின் விநியோகம் செய்ய முன்வருகின்றனர். இதனால் மின்விநியோக நிறுவனங்கள் தங்களது வருவாயில் பெரும்பகுதியை இழக்க நேரிடும். தனியார் நிறுவனங்கள் மின் விநியோகம் செய்ய, மின் சக்தியை யாரிடம் கொள்முதல் செய்யும் என்று சட்டத்தில் கூறப்படவில்லை. தற்போது, மின் விநியோக நிறுவனங்கள், உற்பத்தி செலவு + லாபம் என்ற விலை அடிப்படையில் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து வாங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்காக நீண்டகால மின் சக்தி வாங்கும் ஒப்பந்தங்களும் செய்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஒப்பந்தத்தில் கண்டுள்ள மின் சக்தியை வாங்காவிட்டால், அந்த அளவிற்கான நிலைக் கட்டணத்தை செலுத்த வேண்டும். இந்த முறையை பின்பற்றினால் தனியார் நிறுவனங்கள் நிதி இழப்பைச் சந்திக்க நேரிடும். தனியார் மயத்தால் பலனில்லை. மின்விநியோக நிறுவனங்களின் பகுதிகளிலுள்ள, அதிக வருவாய் தரும் பகுதிகளை தனியாருக்கு கொடுத்துவிட்டால், விநியோக நிறுவனகளின் வருவாய் வெகுவாகக் குறையும். முன்னதாக செய்துக் கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்காக, மின்சக்தி கொள்முதல் செய்யாவிட்டாலும் பணம் அளிக்க வேண்டும். இத்துடன் நிர்வாகச் செலவுகள், பணியாளர்கள் ஊதியம் ஆகியன சேரும்போது. நிதி நிலை மிகவும் மோசமாகும்.

விவசாயிகளுக்கு இலவச மின்சக்தியும், ஏழை பயனீட்டாளர்களுக்கு மானிய விலையில் மின்சக்தியும் தற்போது அளிக்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசு இலவச மானிய மின்சக்தி அளிப்பதை தடை செய்கிறது. பயனீட்டாளர்களுக்கு மின்சக்தி அளிப்பதற்கு ஆகும் செலவை (Average Cost of Supply), ஒவ்வொரு பயனீட்டாளரும் முழுமையாக செலுத்த வேண்டும். தற்போது உயர் அழுத்தப் பயனீட்டாளர்களுக்கு அதிக கட்டணம் வசூலிப்பதன் மூலமும், மாநில அரசின் மானிய உதவியின் மூலமும். குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதன் விளைவாக, பயனீட்டாளர்கள் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். இடைமானியத்தை தவிர்க்க மத்திய அரசு அறிவுறுத்துகிறது.

தனியார் தொழிற்சாலைகள், சோப், செய்தித்தாள்கள், தொலைத் தொடர்பு துறை ஆகியவற்றில் இடைமானியங்கள் விதிக்கும் முறை நடைமுறையில் இருக்கிறது. இதற்கு பதிலாக பயனீட்டாளர்களுக்கு நேரடியாக அவர்களது வங்கி கணக்கில் செலுத்தும் முறையை அமல்படுத்த மாநிலங்களுக்கு மத்திய அரசு மார்ச் 2021 வரை அவகாசம் அளித்து இருக்கிறது. டிசம்பர் 2020 க்குள் மாநிலத்தின் ஒரு மாவட்டமாவது நேரடி பணம் அளிக்கும் முறையை (**D**irect **B**enefit **T**ransfer **S**cheme) அமல்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் 1984ம் ஆண்டு சிறுகுறு விவசாயிகளுக்கும், 1990ம் ஆண்டு அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் சுமார் 22 லட்சம்

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. DBT திட்டத்தை அறிமுகப்படுத்தப்படாவிட்டால், மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து அதிக நிதி பெறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது கோவிட் -19 ன் பாதிப்பால் மாநில அரசுகளின் நிதி நிலை மோசமாக இருக்கிறது. இந்த நிலையில் மின்துறையில் நேரடி மானியம் அளிக்கும் முறையினால் மாநில அரசுகளின் நிதி நிலை மிகவும் மோசமாகும். மின் விநியோக நிறுவனங்கள் மின்பாதை, தொழில் நுட்ப இழப்புகளை (Line loss and Technical losses) குறைக்க வேண்டும். மின் சக்தி அளிக்கும் செலவுக்கு ஏற்ப கட்டணங்களை மத்திய அரசின் வழிகாட்டும் நெறிகளின்படி மின் கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். தவறுகின்ற மாநிலங்களுக்கு கூடுதல் கடன் வசதியில்லை.

மின்சக்தி அளிப்பு விலைக்கு ஏற்ப கட்டண விகிதங்கள் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு கூறுகிறது. தற்போதைய மின் அளிப்பு செலவு என்று வைத்துக் கொண்டால் 200 யூனிட் பயன்படுத்தும் ஏழை பயனீட்டாளர் சுமார் 1400 ரூபாய் கட்டணமாக செலுத்த வேண்டியிருக்கும். சாதாரண மக்கள், அமைப்பு சாரா விளிம்பு நிலை தொழிலாளர்களால் இந்த சுமையை தாங்க முடியாது. மின் சக்தி பயன்பாட்டை குறைத்துக் கொள்வார்கள்.

## Smart Pre Paid Meters

இந்தியாவிலுள்ள அனைத்து மின் இணைப்புகளிலும் முன்பணம் கட்டி மின்சக்தி பெறும் Smart Pre Paid மீட்டர்களை பொருத்த வேண்டும். ஒரு மீட்டரின் விலை சுமார் ரூ.6,000/- என்று வைத்துக் கொண்டால் தமிழகத்தில் உள்ள 2 கோடி மின் இணைப்புகளுக்கு மீட்டர் வாங்க சுமார் 12,000 கோடி தேவைப்படும். இந்தியாவில் எந்த மாநில மின் விநியோக நிறுவனத்திடமும் இந்த அளவு நிதி இல்லை. மாதம் 100-300 யூனிட் பயன்படுத்தும் பயனீட்டாளர்களால் ஸ்மார்ட் மீட்டர்களை வாங்கி பொருத்தமுடியுமா என்பது சந்தேகமே.

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள்.

2010ம் ஆண்டு முதல் சூரிய ஒளி, காற்றாலை மின் சக்தி உற்பத்திப்பிரிவுகள் தடையின்றி இயங்க வேண்டும் என்ற விதிமுறை நடைமுறையில் இருக்கிறது. இதனால், இவைகள் இயங்கும் போது, மின் விநியோக நிறுவனங்கள் முழு உற்பத்தியையும் வாங்க வேண்டும். இதனால் தங்களது மின் உற்பத்தி அளவைக் குறைக்க வேண்டும். முன்னதாக செய்துக் கொண்டுள்ள, மின்சக்தி வாங்கும் ஒப்பந்தங்களின்படி, முழு அளவு கொள்முதல் செய்ய முடியாமல் போனால், கொள்முதல் செய்யமுடியாத மின்சக்தி அளவிற்கு நிலைக் கட்டணம் வழங்க வேண்டும். சூரிய ஒளி இல்லாத போது, இரவு நேரங்களில் மின்சக்தி தேவைக்கு அனல் மின் நிலையங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். அனல் மின் சக்தியின் விலையைவிட அதிகமான கட்டணத்தில் சூரிய ஒளி, காற்றாலை மின்சக்தி ஆகியவற்றை வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு மின் விநியோக நிறுவனங்கள் தள்ளப்படுகின்றன.

2022 ம் ஆண்டுக்குள் இந்தியாவில் 1,75,000 மெ.வா திறனுள்ள சூரிய ஒளி, காற்றாலை மின் உற்பத்தி பிரிவுகளை அமைக்க மத்திய அரசு குறியீடு நிர்ணயித்துள்ளது. இதற்காக தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கு பல சலுகைகளை வழங்கியுள்ளது. இந்த வகை மின்சக்தியை கட்டாயம் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற விதி, விநியோக நிறுவனங்களின் மீது நிதிசுமையை ஏற்படுத்தியுள்ளது.

## ஒழுங்குமுறை ஆணையங்கள்

மாநில ஒழுங்குமுறை ஆணையங்களின் தலைவர், உறுப்பினர்கள் ஆகியவர்களை நியமிக்கும் பொறுப்பு மாநில அரசிடம் இருந்து வருகிறது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள திருத்தங்களின்படி, மத்திய அரசு ஒரு குழுவை அமைத்து இவர்களைத் தேர்ந்தெடுக்கும். இதனால் மாநில ஒழுங்குமுறை ஆணையங்களின் தனித்தன்மையும், சுதந்திரமான செயல்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன. அரசியல் சட்டப்படி மாநில அரசுகளுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் பரிக்கப்படுகின்றன. மின்கட்டண விகிதம், மானியம் வழுங்குவது போன்றவற்றில் மாநில அரசுகள் தலையிட முடியாத நிலை உருவாகியுள்ளது.

## Electricity Contract Enforcement Authority (ECEA)

ஆந்திரப்பிரதேசத்தில், திரு.சந்திரபாபு நாயுடு முதல்வராக இருந்த போது, சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தியாளர்களுடன் மின்சக்தி வாங்கும் ஒப்பந்தம் செய்துக் கொள்ளப்பட்டது. பின்னர் ஆட்சிக்கு வந்த திரு.ஜெகன் மோகன் ரெட்டி அரசு, ஒப்பந்தங்களில் மின்சக்தி விலை அதிகமாக இருப்பதாக, ஒப்பத்தங்களை மறுபரிசீலனை செய்யக்கோரியது. இதனால் மின் உற்பத்தியாளர்கள் மத்திய அரசை அணுகி முறையிட்டனர். அதன் விளைவாக ஒப்பந்தங்களை நிறைவேற்றும் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒப்பந்தங்கள் குறித்து கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால், அவற்றை மாநில ஒழுங்குமுறை ஆணையங்கள் தீர்த்துவைக்கும். இப்போது அது மத்தியில் உள்ள புதிய அமைப்பிடம் கொண்டு செல்லப்படுகிறது. மாநில மின் விநியோக நிறுவனங்கள் அதிகக் கட்டணத்தில் ஒப்பந்தங்கள் செய்துக் கொண்டிருந்தால், ஒப்பந்தத்தில் செய்துக் கொண்டுள்ள அளவை குறைக்க இயலாது. சூரிய ஒளி, காற்றாலை மின்சக்தி ஆகியவற்றின் விலை அதிகமாக இருந்தாலும் அவைகளை கண்டிப்பாக வாங்கவேண்டும். மாநில அரசுகள் வேறு வழியின்றி நிதி இழப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும்.

**தமிழ்நாடு மின்சார வாரியத்தில், கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் - பொறியாளர்கள் உழைப்பால் அணைகள், மின் நிலையங்கள், விநியோகக் கட்டமைப்புகள், மின்பாதைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு நொடியில் இவைகள் தனியாரிடம் ஒப்படைக்கப்படும் என்ற எண்ணமே கண்ணீரை வரவைக்கிறது. பொறியாளர்கள், தொழிலாளர்கள் விருப்ப / கட்டாய ஓய்வில் செல்வதற்கு பணிக்கப்படுவார்கள். சிலர் மற்ற துறைகளுக்கு மாற்றப்படக்கூடும். இந்தியாவில் அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி வழங்கிய மாநிலம் தமிழ்நாடு. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் உள்ள இருவர் கல்வி பயின்று இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பங்காற்றுகிறார்கள். ஆயிரக்கணக்கான பொறியாளர்கள், மருத்துவர்கள், நிர்வாகிகள் உருவாவதற்கு கிராமப்புரங்களில் மின்சக்தி - மானிய விலை மின்சக்தி உதவியுள்ளது. தனியார் மயமானால் இவைகள் சாத்தியமா?..**


தமிழ்நாட்டில் கஜா, ஒக்கி, தானே புயல் பாதிப்புகளின்போது, தமிழ்நாடு மின்சார வாரியம் அரசுத்துறையில் ஒருங்கிணைந்த அமைப்பாக இருந்த காரணத்தால், தேவையான பொருட்கள் மனித வளம், ஆகியவற்றை ஒருங்கிணைத்து 10-15 நாட்களுக்குள் அனைத்து பகுதிகளுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒடிசா


மாநிலத்தில் டைபூன் புயல் பாதிப்பினால், மின்சாரக் கட்டமைப்பு சீர்குலைந்தது. மின்விநியோகம் செய்துக் கொண்டிருந்த தனியார் நிறுவனம், கட்டமைப்பை சீர் செய்ய மறுத்தது. சரி செய்வதற்காக அதிகத் தொகை கேட்டது. சுமார் மூன்று மாதங்களுக்கு பின்னரே, மின்வசதி அளிக்க முடிந்தது.

தமிழ்நாட்டில் பெரும்பாலான ஆண்டுகளில் ஆற்றுப்பாசனம் பொய்த்துப் போயிருக்கிறது. நிலத்தடி நீர் அளவு ஆண்டு தோறும் குறைந்து வருகின்றது. இந்த நிலையில் இலவச மின்சக்தியை இரத்து செய்துவிட்டு நேரடி மானிய முறைக்கு மாறும் போது, விவசாயிகளுக்கு மானியம் வழங்க எந்த மாநில அரசிடமும் நிதி கிடையாது. மின்சாரம் வழங்கப்படாமலோ அல்லது தாமதமாகவோ வழங்கும் நிலை ஏற்படும். விவசாயத் தொழிலை விட்டு ஆயிரக்கணக்கானோர் வெளியேறும் நிலை ஏற்படும். தமிழ்நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்படக் கூடும்.

"தற்போது கொரானா தொற்று வியாதியால் ஏற்பட்டுள்ள மிக அதிகமான பொருளாதார பாதிப்புகளை இந்திய மாநிலங்கள் எதிர் கொண்டுள்ளன. இந்த நிலையில் மத்திய அரசின் தவறான கொள்கை முடிவுகளால் ஏற்படும் நிதிச்சுமையையும் மாநில அரசுகள் சுமக்க வேண்டி வந்தால், அது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்" என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இந்திய மக்கள் மின்சக்தியை பயன்படுத்துவது இயலாத ஒன்றாகி போய்விடும்.

**- பொர்.சா.கண்ணன்**
முன்னாள் துணைத் தலைவர்
பொறியாளர் சங்கம்



## NATIONAL COORDINATION COMMITTEE OF ELECTRICITY EMPLOYEES & ENGINEERS

B.T.RANADIVE BHAWAN, 13-A, ROUSE AVENUE, NEW DELHI -110 002,
Tel fax.011- 23219670 €-mail: eefederation@gmail.com

Date: 23.05.2020

**Shri R K Singh**
Hon'ble Minister, Power and New & Renewable Energy
Govt. of India
Shram Shakti Bhawan,
New Delhi -110 001.

Sub: - Electricity Employees & Engineers to Observe Protest Day on 1st June. 2020

Ref:- Ref: No. 42/6/2011-R&R(Vol-VIII) Dated 17/04/2020 of Ministry of Power

Dear Sir,

We have noted with grave concern that Government of India vide above notification proposed Electricity (Amendment) Bill, 2020 towards privatization of the sector through transferring the asset created with public exchequer inclusive of natural resources to cronies of the government. NCCOEEE constituents vehemently criticized the approach of the government ventilated through the proposed draconian anti-people electricity legislation with clear object of snatching away right of access to electricity from poor section of Indian people and peasants. It is evident that your priority is the interest of ease of making business for the profit monger community and all aspects related to right to electricity for poor people has been set aside. We are anguished to note that when whole country is integrally fighting menace of COVID-19, your ministry is otherwise busy in curbing the people's right to energy.

NCCOEEE Apex leadership decided to make wider campaign among people of different walks of life to unveil the counterfeit behind the policy of the government and misleading statement submitted in the paragraphs under Objects and Reasons circulated with the notification of the Bill. As a part of this campaign **National Protest Day will be observed on 1st June, 2020.** Electricity employees and Engineers will exercise their democratic right through wearing Black Badges opposing the Bill and urging the people to come forward to retain their constitutional right for access to energy as a member of the civilised country.

Thank you,

Sincerely yours
**Prasanta N. Chowdhury**
Convener / 9830264170

---

**National Coordination Committee of Electricity Engineers and Employees**

# Protest Day
# 1st June 2020

# ALL INDIA FEDERATION OF POWER DIPLOMA ENGINEERS

(An Apex Body Embodying All State Power Diploma Engineers Associations Throughout India)

National President
Er. R.K. Trivedi
Mob. 9415030677

**HEAD OFFICE :**
**33/11 KV Sub Station,**
**Hydel Colony, Sector-20,**
**Noida-201301 (Uttar Pradesh)**

National Secretary General
Er. Abhimanyu Dhankhar
Mob. 9254016116

**CAMP OFFICE** (For Correspondence) **:**
**C/o 1265/13, Sagar Traders,**
**Sukhpura Chowk, Gohana Road,**
**Rohtak-124001 (Haryana)**

*aifopde@gmail.com* *aifopde.org* *aifopde.sg@gmail.com*

Working President
Er. G.V. Patel
M. : 9415900262

Sr. Vice President
Er. D.S. Dhatwalia
M. : 9418031402

Vice President
Er. S.K. Mahadule
M. : 8226012079

Vice President
Er. Sanjay Chakraborty
M. : 9433903512

Additional Secretary General
Er. Jay Prakash
M. : 9452735122

Deputy Secretary General
Er. Devinder Singh
M. : 9417040186

Deputy Secretary General
Er. A. Antony Padovaraj
M. : 9443872166

Chief Organising Secretary
Er. Satya Ranjan Sarkar
M. : 9434371470

Finance Secretary
Er. Jaswant Rai
M. : 9872412866

Publicity Secretary
Er. Varinder Kumar Sharma
M. : 9415900551

Auditor
Er. J.C. Pant
M. : 9456590125

*Ref No.* 11/NS/AIFOPDE/2020 *Date* 21/04/2020

**Shri R K Singh,**
**Hon'ble Minister Of State (I/C),**
**Power, New & Renewable Energy,**
**Shram Shakti Bhawan, Rafi Marg,**
**New Delhi.**

**Subject:-Regarding Proposed Amendment to Electricity Act 2003 vide below referred letter–To held it in abeyance till the Covid-19 emergent situation normalization or 30th Sep 2020 whichever is later and reissuance of the same at the appropriate and suitable times for comments/suggestions from all stakeholders.**

**Reference:-Ministry of Power, Government of India, Letter No.42/6/2011-R&R(Vol-VIII) Dated17th April,2020.**

**Respected Sir,**

In the subject cited matter and the above referred letter, the Federation like to convey its vehement protest to Ministry of Power for proposing the Amendment to Electricity Act 2003 and giving a time limit of 21 days for submission of comments and objections amidst the spread of pandemic Covid-19 while the whole world including India is under lockdown and the whole mankind is breathing under threat of mass extinction.

We as National Federation are extremely surprised about the selection of time and allotted time frame for circulation of **Proposed Amendment to Electricity Act- 2003** and comments thereof, while all efforts in this matter turns out futile since last seven years and we are unable to find valid ground/reason for the selection of this time and seems like an opportunistic move to deprive all stakeholders to raise objections, make suggestions for these Anti People-Anti Employee amendments and an effort to snatch the democratic rights of all stakeholders.

On one hand side when about 1.5 million electricity employees and engineers are working as **unsung Covid Warriors** to ensure the availability of Power throughout the length and breadth of country and facilitating availability of electricity just to ensure that all emergency services continues to function and fellow Covid warriors can perform their prime duties of saving the mankind along with facilitating comfortable stay to people of India to support **"Stay Home Stay Safe"** campaign by risking their lives under the **call and able leadership of Hon'ble Prime Minister of India and ornamented their services to Nation by achieving the historical feat of maintaining the stability of National Grid on 9th April 2020 by successfully enduring the jerk of 31000 MW in demand of Electricity under your good self leadership.**

Whereas on the other hand, all electricity employees and engineers found themselves **not only unrecognized, unsung, unfairly treated but also feeling cheated to come to know about the subject cited proposed amendment in Electricity Act-2003 and there is strong resonance of utter dismay and displeasure among them and resented voices are being raised through the various National federations, associations and unions.**

It is also worthwhile to mention here that Federation have requested to your **good self to extend the Insurance cover of Rs. 50 Lacs to all electricity employees owing to the fact that all existing departmental and personal insurances would become unfruitful due to pandemic clause of insurance companies to boost their moral and reassure their families in this tough time but instead of paying any attention to our legitimate and just demand all electricity employees are being forced to see this proposed amendment.**

Prime facie, the proposed amendments are of fundamental nature and incorporating the major changes in the structure of Electricity Act 2003, these are required to be studied and analyzed in depth. **All India Federation of Power Diploma Engineers (AIFOPDE)** is of the confirmed opinion that comments, views and objections of all the stake holders including consumer and public in general must be obtained and due consideration should be given to all of them by the Government of India . But this is not the appropriate time to undergo such an important activity while the Nationwide lockdown has been extended till 03rd May,2020 and is expected to extend further with fair probability of relaxation in lockdown in multiple phases.

To discuss and finalize the statements of objections and suggestions, regarding the subject cited proposed amendment to Electricity Act, 2003, we as All India Federation of Power Diploma Engineers would have to call National Level Meeting and sought feedbacks from all state constituents in this matter which is not possible in the provided time frame amidst Nationwide Lockdown.

However as a Federation we would like to state that by honestly analyzing the present position during massive outbreak of pandemic Covid-19 and contribution of Government employee and government sector vis –a-vis so called big private entities and private sphere, **One would find that India is emerging as a world leader in fight with Corona on the shoulders of Government employees and PSU's despite all odds like high density population, high number of infected immigrants from abroad and due to India's massive public infrastructure in health, banking, power, police, water and sanitation, telecommunication, transport specifically railway, scientific institutions etc. which are ornamented with dedicated employees.** There is not only even a single maiden case where any Government employee has taken his or her steps back in this fight. In addition to this, all of them have donated the parts of their salaries to the Covid Relief fund on their own. **All Government employees are still ready to sacrifice themselves in the line of their duties.** One would be scare enough to think about the present situation in absence of these Covid Warriors if all these PSU's had been disinvested/ sold as per plans of Government of India, So **owing to their contributions and future importance we would like to request the Government of India to roll back all their plans for selling /disinvestment of PSU's including the present subject cited matter and scrap all of them.**

**Further, if the Ministry of Power, Government of India founds it inevitable to bring the subject cited proposal for amendment to Electricity Act, 2003 then we would like to assert as well as request as a Federation that this proposal must be held in abeyance till the normalization of present pandemic situation or 30th Sep 2020 whichever is later.**

**Thanks in anticipation.**

**Sincerely Yours**

[signature]

**Secretary General**
**All India Federation of**
**Power Diploma Engineers**

**A copy of the above is being forwarded to following dignitaries for kind information and further necessary action please.**

1. **Hon'ble Prime Minister, GOI, New Delhi for kind intervention please.**
2. **Hon'ble Chief Ministers of all States.**
3. **Hon'ble Lt. Governors & Administrators of all UT's.**
4. **Hon'ble Power Ministers of all States.**
5. **Secretary Power, GOI, New Delhi.**
6. **The National Coordination Committee of Electricity Employees & Engineers.**

முனைவர் சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மண்டல செயலாளர் / திருச்சி.

## மாறுபட்ட சிந்தனை (Lateral Thinking)

உலகில் உள்ள கோடிக்கணக்கான உயிர்களில் கிடைத்தற்கரிய வாழ்க்கையை பெற்ற உயிரினம் மனிதன் மட்டுமே!

விலங்குகள், பறவைகள் இப்படி எல்லா உயிரினங்களும் பிறக்கின்றன வாழ்கின்றன பின் இறக்கின்றன. ஆனால் மனிதன் மட்டுமே இறந்தும் வாழ்கிறான். அவன் வாழும் காலத்தில் எதனை சாதித்தான் என்பதனால் ஒரு மனிதன் தன் செயல்பாட்டால் மனிதனாகவோ தனது கீழான செயல்பாட்டால் விலங்காகவோ தனது மேன்மையான செயல்பாட்டால் மா மனிதனாகவே வாழ முடியும்.

மனிதன் சிறப்பாக வாழ்வதற்கும் வெற்றி பெற்ற மனிதராக வாழவும் காரணம். மாறுபட்ட சிந்தனையே. யார் வெற்றியாளர்கள் என்பதற்கு பிரபல எழுத்தாளர் சிவகேரா இந்த வாக்கியத்தை சொல்கிறார்.

**“Winners Don't Do Different Things, They Do Things Differently”**

வெற்றியாளர்கள் எதையும் வித்தியாசமாக செய்வதில்லை, தான் செய்வதையே வித்தியாசமாக செய்கிறார்கள்.

எனவே வாழ்வில் பணியில் வெற்றி பெற புதிதாக எதனையும் கண்டுபிடிக்க வேண்டும் என்று அவசியமில்லை. செய்கிற செயல்களில் வித்தியாசத்தை புகுத்தினாலே நாம் தனித்து தெரிய முடியும். உங்களுக்கென்று ஒரு தனித்தன்மை (Identity) அலுவலகத்திலும் சமுதாயத்திலும் உருவாகும். இது மாறுபட்ட சிந்தனையால் மட்டுமே முடியும்.

ஒவ்வொரு உயிர்களையும் படைத்த இறைவன் ஒவ்வொன்றிற்கும் ஒரு தனித்திறமையை வைத்தான். மனிதனுக்கு எதுவும் தனித்திறமை இல்லை. பறவைபோல பறக்க முடியாது. சிறுத்தை போல் ஓட முடியாது, யானை போல் பலம் கிடையாது. ஆனால் கடவுள் இவற்றிற்கெல்லாம் இல்லாத ஒன்றை மனிதனுக்கு கொடுத்தார். அது சிந்தனை ஆற்றல். இதை வைத்துதான் உலகில் உள்ள அனைத்து ஜீவ ராசிகளையும் நம் கட்டுப்பாட்டில் வைத்துள்ளோம்.

வாழ்வில் வெற்றி பெற்ற மனிதர்கள் யாவரும் இந்த சிந்தனை ஆற்றலை சிறப்பாக பயன்படுத்தியவர்கள் என்பது திண்ணம்.

ஒரு மனிதனின் வெற்றி உயரம் அவன் மாறுபட்டு சிந்திப்பதில் உள்ளது. அடுத்தவர்கள் போன பாதையில் நாம் போவதும், செய்த செயலை ஒரே மாதிரி செய்து கொண்டிருப்பதும் அலுப்பை தரும். நமது அலுவலகத்தில் நாம் செய்யும் வேலைகள் பெரும்பாலும் பல ஆண்டுகளாக முகப்பு கடிதம் (Covering Letter) கூட எந்த மாற்றமும் இன்றி எழுதுவதால் தான் நமக்கு சிந்தனை பலம் கிட்டுவதில்லை. தொடர்ந்து பிரிவுகளில் நாம் செய்யும் வேலையை எப்படியெல்லாம் செய்யலாம் என்பதனை முதலில் பட்டியலிட வேண்டும் . அதில் மாறுபட்டு வித்தியாசமாய் விரைவாய் செய்யக்கூடிய வழியினை தேர்வு செய்ய வேண்டும். பிறகு அதனை நடைமுறை படுத்த வேண்டும்.

கடினமாக வேலை செய்து மன அழுத்தத்தை ஏற்படுத்திக் கொள்வதை விட

சிந்தித்து புத்திசாலி தனமாக வேலை செய்வதால் பணியில் திருப்தியும், பாராட்டும் கிடைக்கும். சமீபத்தில் ஒரு தொழில் அதிபர் கடன் தொல்லையால் தனது ஒற்றைக் குழந்தையுடன் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்வது என முடிவெடுத்தார். எனவே கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்வதா? விஷம் குடித்து இறப்பதா? தூக்குக் கயிற்றில் உயிரை விடுவதா? தீக்குளித்து சாவதா? தண்டவாளத்தில் தலை நீட்டி இறப்பதா? என ஆலோசித்தார். அப்போது அவரின் குழந்தை அப்பா! சாவதற்கே இத்தனை வழிகள் இருக்கும்போது வாழ்வதற்கு ஒரு வழிகூட இல்லையா? என்று கேட்டவுடன் அந்த சாட்டையடியில் விழித்தெழுந்தார். சிந்தித்தார். வாழ்க்கை மீண்டும் பூத்தது. இத்தகைய மாறுபட்ட சிந்தனை இல்லாததால்தான் நாளுக்கு நாள் மனிதன் இவ்வுலகில் தற்கொலை செய்துகொள்கிறான்.

சிந்தனை செய்யும் மனிதர்கள் அதனை செயல்படுத்தும் போது மகிழ்ச்சி அடைகிறார்கள். எனது சிந்தனை நிஜமாகிறது என்று பார்க்கும் போது மனதில் மகிழ்ச்சி பெருகும். யாரோ சொன்ன சூத்திரப்படி செய்யும் செயல்கள் வெறுப்பை தான் உண்டாக்கும்.

மாறுபட்ட சிந்தனை (Lateral thinking) என்பது தற்போது உலக அளவில் பயிற்சியாளர்கள் விலகிய சிந்தனை (Thinking shift) என்று கூறுகின்றனர். ஒரு பயிற்சி பட்டறையில் விலகிய சிந்தனை என்றால் என்ன? என்று என்னிடம் பங்கேற்பாளர் கேட்டபோது அவருக்கு விளக்கம் அளித்தேன். மகா பாரதத்தை கண்ணன் பார்வையில் படித்திருக்கிறோம். பீஷ்மர் பார்வையில் படித்திருக்கிறோம். என்றேனும் சகுனி பார்வையில் மகா பாரதத்தை ஆராய்ந்து இருக்கிறோமா? சகுனி பார்வையிலும் ஆராய்ந்தால் தான் எது சரி என்று தெரியும். ஏன் சகுனி கௌரவர்கள் கூட இருந்தே அவர்களை அழித்து தானும் அழிந்தான் என்பதை ஆராய்வதுதான் மாறுபட்ட சிந்தனை என்று கூறினேன்.

பிரிவுகளில் எல்லா பிரச்சினைகளையும் தீர்க்க எல்லோருடைய நிலையிலும் இருந்து பிரச்சனையை பாருங்கள் அப்போதுதான் நிரந்தர தீர்வு காண முடியும். நான் உளவியல் பயிற்சி மேற்கொள்ளும் போது எனது பயிற்சியாளர் ஒரு வார்த்தை கூறுவார். Every behavior has a positive intention' எல்லோருடைய செயல்களுக்கும் பின்னும் ஒரு நேர்மறை நோக்கம் இருக்கிறது. இதிலிருந்துதான் உளவியல் ரீதியான மாறுபட்ட சிந்தனை உருவாகிறது. உங்கள் அலுவலகத்தில் ஒவ்வொரு பணியாளர்களும் செய்யும் ஒவ்வொர செயல்களுக்கும் பின்பும் அவர்களின் பார்வையில் சரியாக இருக்கிறது. ஆனால் ஒரு அதிகாரியாக உங்கள் பார்வையில் வாரிய பார்வையில் அது வேறுபடலாம். இந்த இடத்தில் அவர்கள் பார்வை சரியில்லை என்று வாதிடுவது எந்த பயனையும் தராது. மாறாக அவர்களின் பார்வையை மாற்ற நாம் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திப்பது சிறந்தது.

உதாரணமாக ஒரு தீவிரவாதி கூட அவனின் பார்வையில் நேர்மறையாக சிந்திக்கிறான் என்பதே உண்மை. ஆனால் அது சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் தீங்கு விளைவிக்கும் போது நமக்கு அநீதியாக படுகிறது. அவனின் பார்வையில் சிந்தித்து தீர்வு காண முயலும் போதுதான் பிரச்சனை தீரும். பிரிவு அலுவலகங்களில் ஒவ்வொரு பணியாளரும் ஒவ்வொரு தொழிற்சங்கம் ஒவ்வொருவரும் தனித்தனியான கொள்கை. மேல் மட்ட அதிகாரிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி ஒவ்வொருவருக்கும் வேறு மாதிரி சிந்தனை. இவை எல்லாவற்றையும் எப்படி ஒன்றினைப்பது என்று ஒரு பிரிவு பொறியாளர் நினைக்கும் போது தலை சுற்றுகிறது.

மீண்டும் நினைவு கொள்ளுங்கள் எல்லோருடைய செயலுக்கு பின்பும் ஒரு நேர்மறை

காரணம் இருக்கிறது. அது சுய நலமாக கூட இருக்கலாம். அதைப்போல நமது சிந்தனை மற்றும் செயல் பாட்டிலும் ஒரு நேர்மறை நோக்கம் இருக்கிறது. எனவே நம்முடைய நோக்கம் நிறைவேற அடுத்தவர்களை புண்படுத்தாமல் நமது செயல் நோக்கி கொண்டு செல்வதே பணியின் வெற்றி. ஒரு மனிதனுக்குள் ஒரு நாளில் சுமார் அறுபதாயிரம் எண்ணங்கள் வந்து மோதிச்செல்லும். இவற்றில் எத்தகைய எண்ணங்களை நாம் அவ்வப்போது அசைபோடுகிறோமோ அவை நம் ஆழ் மனதில் படிந்து கொள்கின்றன. களைகளைப்பிடுங்கி எறிந்து நல்விதைகளால் நாற்றாங்காலை அழகுபடுத்தும் விவசாயியைப்போல் எதிர்மறைச் சிந்தனைகளை அகற்றி நற்சிந்தனைகளால் நிரப்பப்படும்போது நம் வாழ்க்கை செழிக்கும்.

குரங்கு குல்லா வியாபாரி கதையை சிறு வயதில் நாம் அனைவரும் படித்திருக்கிறோம். அதனை மாறுபட்டு பார்ப்போம். ஒரு குல்லா வியாபாரி கூடை நிறைய குல்லாவுடன் வியாபாரத்திற்கு செல்கிறார். வழியில் வெயில் தாங்காமல் ஒரு மரத்தடியின் கீழ் கூடையை இறக்கி வைத்து விட்டு சிறிது நேரம் தூங்குகிறார். கண் விழித்து பார்த்தபோது கூடையில் குல்லா எதுவும் இல்லை. மேலே மரத்தை பார்க்கிறார். குரங்குகள் யாவும் இவரின் குல்லாக்களை போட்டுள்ளன. குரங்குகள் நாம் செய்ததை திரும்ப செய்யும் என்று கேள்விப்பட்டது ஞாபகம் வர குல்லாவை கழற்றி வீச குரங்குகளும் அப்படியே கழற்றி வீச அதனை சேகரித்து கொண்டு வியாபாரத்திற்கு செல்கிறார். இந்த அனுபவத்தை தான் சிந்தித்து செயல் படுத்திய வெற்றி இரகசியத்தை தன் மகனிடம் சொல்கிறார். குல்லா வியாபாரி மகன் பெரியவனானதும் அதே போல் குல்லா வியாயபாரம் செய்ய செல்கிறான். அதே மரம் அதே ஓய்வு அதே போல் குரங்குகள் குல்லா அனைத்தையும் எடுத்து சென்று மாட்டிக்கொண்டுள்ளன. கண் விழித்த மகன் தந்தை சொன்ன அனுபவத்தின்படி குல்லாவை கழற்றி வீசுகிறான். என்ன ஆச்சரியம் ஒரு குரங்கும் குல்லாவை கழற்றி வீசவில்லை. அப்போது ஒரு வயதான குரங்கு கீழே இறங்கி வந்து சொன்னதாம். உனக்கு மட்டும்தான் அப்பா இருக்கிறார் என்று நினைத்தாயா? எனவே நண்பர்களே நம் அலுவலகத்தின் ஒவ்வொரு பணியாளர்களும் ஏற்கனவே நிறைய அனுபவங்களை கண்டவர்கள். பழையபடி யோசித்தால் சிக்கல்தான் மாறுபட்டு யோசித்தால் நீங்கள் வெற்றியாளர் தான். மாறுபட்டு சிந்தியுங்கள். அலுவலகம் உங்கள் கையில்.

– தொடரும்

## கண்ணீர் அஞ்சலி

18.05.2020 பொர்.P.சதீஷ்குமார்/உதவி பொறியாளர்/SS/ தஞ்சை கிளை அவர்களின் **தந்தையார்.**

24.05.2020 பொர்.S. ஆறுமுகம்/ உதவி செயற் பொறியாளர் / மைலாப்பூர் சென்னை மையக்கிளை அவர்களின் **தந்தையார்.**

**ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தாரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.**

## 12. ஔவியம் பேசேல்:

ஔவியம் (பொறாமை) என்பது ஒப்பிட்டு பார்ப்பதின் விளைவு, நாம் நம்மை சக மனிதர்களோடு மட்டும்தான் ஒப்பிட்டுப் பார்கிறோம். இயற்கை அளித்த மற்ற ஜீவன்களான மான், மயில், புலி போன்ற விலங்குகளோடு ஒப்பிட்டு பார்ப்பதில்லை.

நாம் நம்மை விட தாழ்ந்தவர்களிடம் பொறாமை கொள்வதில்லை. ஆனால் அந்நபர் வளர்ந்து நம் அளவிற்கோ அல்லது நம்மை விட சற்று மேலாகவோ உயர்ந்து விட்டால் நமக்கு பொறாமை வந்து விடுகிறது. இன்னும் சற்று ஆழமாக பார்த்தால், நாம் ஒப்பிடும் நபரின் அளவுக்கு நம்மால் உயர முடியாது என்று நினைப்பவர்களுக்கே பொறாமை உருவாகும். நாம் அவரை எட்டி விட முடியும் என்று நம்புவர்களுக்கு அவ்வொப்பீடு ஒரு உத்வேகத்தை தரும். உத்வேகம் பெறுவதோ, பொறாமை கொள்வதோ அவரவர் மன நிலையைப் பொருத்தது.

பொறாமை குணம், பொறாமை கொள்பவரையும் பொறாமைக்குரியவரையும் அழித்து விடும் ஆற்றல் பெற்றது. பொறாமை நம் உள்ளிருந்து எதிர்வினையாற்றத் தொடங்கும். அவரைப்பற்றி பல விதமாக மற்றவர்களுடன் பேசத்துவங்குவோம்.

800 ஆண்டுகளுக்கு முன்னர் உலகிலேயே மிகச்சிறந்த பல்கலை கழகமாக இருந்தது நளந்தா பல்கலைக்கழகம். கலை, மருத்துவம், கணிதம், வானவியல், அரசியல் தந்திரம் போன்ற பாடங்களை கற்க பல நாட்டிலிருந்து நளந்தா வந்தனர்.

நூறு ஆண்டுகளுக்கு மேல், சிறந்த கல்வி வழங்கிய பல்கலைகழகம் அழிக்கப்பட்டுவிட்டது. காரணம் பொறாமை, ஆம்.

1193ல் துருக்கிய அரசன் பக்தியர் கல்ஜியால் (Muhammad bin Bakhtiyar Khalji) நளந்தா பல்கலைகழகம் தாக்கப்பட்டது. கில்ஜிக்கு ஒரு முறை உடல் நலம் சரியில்லாமல் போனது. பல மருந்துகள் உட்கொண்டும் உடல் நலம் பெறவில்லை. நளந்தா பல்கலைகழகத்தின் மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றால்தான் குணமாகும் என்று அறிவுறுத்தப்பட்டது. அப்போது நளந்தா பல்கலை கழகத்தில் தலைவராக இருந்தவர் ராகுல் ஸ்ரீ பத்ரா. கல்ஜி தன்னுடைய மதத்தின் மீது அதீத நம்பிக்கையுள்ளவர். இதனால் கடவுள் மறுப்பாளரான ஸ்ரீ பத்ராவிடம் சிகிச்சை பெற கல்ஜி விரும்பவில்லை. ஆனால் வேறு வழியின்றி ஸ்ரீ பத்ரா அழைக்கப்பட்டார். சிகிச்சை அளிக்க வந்த ஸ்ரீ பத்ராவிடம் கல்ஜி ஒரு சவாலை வைத்தார். எந்த மருந்துகளையும் கொடுக்காமல் என்னை குணப்படுத்த வேண்டும் என்பதே அது. ஸ்ரீ பத்ராவும் சவாலை ஏற்றுக்கொண்டு வெற்றியும் பெற்றார்.

தன் நாட்டில் இருப்பவர்களை விட இங்கே இருக்கும் மருத்துவர்கள் திறமை மிக்கவர்களாக இருக்கிறார்கள் என்பது கல்ஜிக்கு பொறாமையை உண்டாக்கியது. பல்கலைக்கழகத்தை கைப்பற்ற நினைத்தார். ஆனால் அதற்கு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பதால் அதனை அழிக்க வேண்டும் என்று முடிவெடுத்தார்.

பல்கலைக்கழகத்தின் ஆணி வேரான நூலகத்தை தீக்கிரையாக்கினார். ஏராளமான மருத்துவ குறிப்புகள் எரிந்து நாசமானது. நளந்தா பல்கலைக்கழகம் முற்றிலும் அழிக்கப்பட்டது.

பல்கலைகழகத்தின் ஆணி வேரான நூலகம் பொறாமையினால் அழிக்கப்பட்டதை போல, நட்பு, உறவு என்ற மனிதத்தின் ஆணி வேர்கள் பொறாமை என்னும் மாய உணர்வினால் அழிந்து போகக்கூடும்.

ஆகவே ஔவியம் (பொறாமை) கொள்வதும் பொறாமை பேசுவதும் கூடாது என்று ஔவையார் கூறுகிறார். ஔவையின் கூற்றின்படி ஔவியம் படேல், ஔவியம் பேசேல்.....

தொகுப்பு.......
நே.ரா.செந்தில்
செயலாளர் / வெளியீடு.

## பணி ஓய்வு பாராட்டு

On Voluntary Retirement on 30.04.2020

1. **Er.S.Venkatesan**, President/Vellore Branch, AEE/Shift/230 KV SS/Hosur. **9677343110**
2. **Er.A.Mathialagan,**President/MTPS Branch, AEE/CHP2/MTPS2,MTPS Branch. **9486350567**
3. **Er. R.Nagalingam**, Former BS/Nagai, AEE/MRT/Thiruvarur Branch., **8754700930**
4. **Er. G.Chinnappan**, Former President/Tiruppur, EE/Operation/230KV SS, Nallamanaickenpatti, Virudhunagar Branch. **9442100445**
5. **Er. R.John Kennedy,** Former Br. Treasurer/Madurai, JE1/DRIP/Madurai Branch. **9894362392.**
6. **Er.R.Logeswaran**, EE/MRT North,Chennai North Branch. **9445512807**
7. **Er.A.Saraswathi**, EE/O&M/Arani, THiruvannamalai EDC / Branch. **9486484962**
8. **Er.R.Rengaraj**, AEE/O&M/Ayyermalai, Karur Branch. **9443513353**
9. **Er.R.Solaiappan**, AEE/SSE/Virudhunagar, Virudhunagar Branch. **9443868351**
10. **Er.T.Mani**, AEE/Shift/230 KV SS/Ingur, Erode Branch. **9865292928**
11. **Er.A.Soundararajan**, AEE/O&AHS/MTPS1, MTPS Branch. **9486688924**
12. **Er.K.V.Gunasekaran**, AE/Mech./Work Shop, Gandhi Nagar, Vellore Branch. **9442234778**
13. **Er.V.Shanmugavadivel**,JE1/CHP1/MTPS1,MTPS Branch. **9080595602**
14. **Er.S.Paramasivam**, JE1/O&M/Illuppur, Pudukkottai Branch. **9698288981**
15. **Er.T.K.Ravichandran**, JE1/Shift/110 KV Grid SS, Punalkulam, Pudukkottai Branch. **9443356466**
16. **Er.C.Natarajan**, JE1/O&M/Athimoor, Thiruvannamalai Branch. **9159362190**
17. **Er.G.Raj**, JE1/Shift/110 KV SS, Vinnavanoor , Thiruvannamalai Branch. **9445856177**
18. **Er.T.Oliver John**, JE2/ Munchirai SS, Kanyakumari Branch. **9443347577**
19. **Er.P.Mariyappan**,JE2/110 KV SS, Narimanam, Nagai Branch. **9486911894.**

On Voluntary Retirement on 02.05.2020

1. **Er.G.Ramalingam**,AEE/Mtce/230 KV SS, Unjanai, Namakkal Branch. **8012337583.**

***Sangam Wishes a Happy Retired Life***

சுற்றும் வரை தான் பூமி
சுடும் வரைதான் நெருப்பு
போராடும்வரை தான் மனிதன்

## Yet Another Social Activity by our Sangam

Government prescribed Homoeopathic Medicine for Covid-19 disbursed to Staff and Officials at the Head Quarters Building on 21.05.20 by our Sangam.







## ஒலி முழக்கப் போராட்டம்

Dear Ers.

**"The spontaneous response of the Staff of TANGEDCO to the protest program at a short notice gives renewed hope. People at a small place in the remote corner (like Moyar PH) have realised and risen up to the occasion. I wish JAC every success in their fight against privatisation."**

The above message from our Senior Stalwart beloved Er.S.Kannan, Former VP/Civil says it all. The lightening demonstration in all corners of TANGEDCO by all Unions including our Sangam today/18.05.20 against Privatization of Distribution in Union Territories of the Nation was a great and spirited one.

**Kudos to each one of you.**

Sincere thanks to all members and Office Bearers for their spontaneity and conducting the event successfully under a short notice. This is just the beginning of a long war against the privatization agenda and more to follow.

**Let's keep the spirit burning until the desired goal is reached.**

Long Live Sangam.

- **Er.A.Antony padovaraj**
State President

MIN ALAI - May - 2020 RNI No. TNBIL / 2012 / 47622

Printed Book Periodical

**<u>May 16:</u>**

**Union Finance Minister : Privatisation of power discoms in Union Territories.**

The only UT dept that never saw loss in **Chandigargh**
" the power department is the most profit earning wing of the UT and has never been in the red. The JERC tagged it as the best power utility in the country for the past five years. The line losses in the city are only 9 percent to 10 percent "

## Tamil Nadu, Kerala, Andhra pradesh and Telengana states opposes the "Electricity Amendment act 2020"

## அகில இந்திய மின் ஊழியர்களின் எதிர்ப்பு நாள் 1.6.2020

மத்திய அரசே!

- மாநில மின் வாரியங்களை பிரிக்காதே!
- மின் விநியோகத்தை தனியாருக்கு தாரை வார்க்காதே!
- மாநில அரசுகளின் உரிமைகளை பறிக்காதே!
- மின்சார சட்டத்திருத்த மசோதா – 2020ஐ வாபஸ் வாங்கு!
- மாநில அரசால் விவசாயம், குடிசை, நெசவு போன்றவைகளுக்கு சமூக அக்கறையுடன் செயல்படுத்தி வரும் மானிய திட்டங்களை முடக்காதே!

**தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு**



Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079. Edited by : N.R.Senthil